APPROVED BY THE TEXT BOOK-COMMITTEE, MADRAS.
Vide Ft, St, George Gazette Page 604 (19-11-29.)

THE TRIUMPH OF SIVAJI.

(ILLUSTRATED)

BY

N. R. SUBRAMANIA SARMA
Head Tamil Pandit,
A. M. High & Training Schools,
Pasumalai.

Can be had of
S. N. RATNAM & Co.,
PASUMALAI.

 1932. [*8 Annas.*

ஸ்ரீ

சிவாஜி விஜயம்.

படங்களுடன் கூடியது.

பசுமலை உயர்தர போதனாமுறைக் கலாசாலைகளின்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
நே. ரா. சுப்பிரமணிய சர்மா
எழுதியது.

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

கிடைக்குமிடம்.
S. N. ரத்தினம் அன்கோ,
பசுமலை.

Third Edition.
Meenakshi Vilas Press, Madura.
1932.



சிவாஜி மகாராஜா.

முகவுரை.

நமது இந்திய தேசம் மிகப்பரந்திருப்பது போலவே, அதன் சரித்திரமும் மிகப் பரந்ததாகும். இத்தேச சரித்திரத்தை ஏதோ ஒருவாறு நன்குணர வேண்டுமாயின், பல்வேறு இனத்தவர் இராஜ்யங்களையும், அவைகளை ஸ்தாபித்தவர்களையும், பலதிறப்பட்ட மதங்களையும், அவற்றின் வரலாறுகளையும் பற்றி அறிதலோடு, அவைபோன்ற மற்றும் பல விஷயங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். ஆதலின் நமது தேசசரித்திரம் முற்றக் கற்றுணர்தற்கு அரிதாய், உணருந்தோறும் தம் எல்லையற்ற தன்மையையும், தம்மை உணர்ந்து அனுபவிக்க விரும்பும் அடியார்களின் சிறுமையையும் தோற்றுவித்து விளங்கும் கடவுளினுடைய கடல்போன்ற பரந்தபெருமை போல விளங்குகின்றது.

ஆயினும் நம்தேச சரித்திரமென்னும் கடலினிடையே ஆங்காங்குத் தோன்றிக் கண்ணைக் கவரும் அழகிய தீவுகளை போல, பல பெரியோர்களுடைய சரிதங்கள் நம் மனத்தைக் கவர்கின்றன. அத்தகையோர்கள், அசோகர், அக்பர், சிவாஜி, கிருஷ்ணதேவராயர் முதலியவர்களே என்று யாவருமறிவர்.

அவர்களுள் ஒவ்வொருவரும் தத்தமக்குச் சிறப்பான வகையாற் புகழ்படைத்து விளங்கினர். ஆனால் சிவாஜிமன்னருக்கும், மற்றையோர்களுக்கும் ஒருமுக்கியமான வித்தியாசம் உண்டு. அசோகர், அக்பர் முதலானவர்கள் முடிமன்னர்களாகப் பிறந்து தாங்கள் அடைந்ததை விருத்திபண்ணிச் சிறப்படைந்தனர். ஆனால் நம் சிவாஜியோ, தம்முயற்சியால்

முற்கூறிய மற்றையோர்களைப்போலப் பெருமையுற்றதுமன்றி அவர்கள் சாதிக்கமுடியாத ஓர் அரிய காரியத்தையும் சாதித்து முடித்தனர். அதாவது மகாராஷ்டிரர் எல்லோரையும், இந்துக்களில் கட்டுப்பாடும், சுயஜனுபிமானமும் உள்ள ஓர் இனத்தவர் ஆக்கியதேயாம். இவ்விஷயத்தில் அவர் பெருமை அவ்வினத்தவரால் இன்றும் என்றும் போற்றத்தக்கதே.

மேலும் அவர்பட்ட அரும்பாடுகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால், அவருடைய உலையாதமுயற்சியும் சலியாத ஊக்கமும்,*'இவ்வுலகில் ஓர் அரிய காரியத்தைச்செய்து முடிக்கவே என்னைக்கடவுள் படைத்திருக்கிறார்' என்று தம்மிடம் அவர் கொண்ட நம்பிக்கையும், இவை போன்ற பல உயர்ந்த குணங்களும் நம்முன் தோன்றுகின்றன.

ஆதலின் அவர் சரிதையை அவர்தம் குணச்சிறப்புக்கள் எல்லாம் நன்கு புலப்படும் வண்ணம் எழுதிவெளியிட்டால், 'யாவும் விதிப்படி நடப்பன ஆம்; நம்முயற்சியால் நடப்ப தொன்றுமில்லை' என்றெண்ணி, ஆக்கமும் ஊக்கமும் சோர விட்டு வருந்தும் இயல்பு பெரிதுமுடையவரான நம் சிறுவரும் மற்றையோரும் பயனடைவர் என்று நெடுநாளாக விரும்பியிருந்தேன். அதனாற் சிறுவர்க்குப் பயன்படும்முக்கியநோக்கத்தைக்கொண்டு, இயன்றவரை இலகுவான நடையில், பிரபல சரித்திராசிரியர்கள் அபிப்ராயங்களைத் தழுவி இச்சிறுநூலை எழுதியிருக்கிறேன்.

---


* இவ்வாறே ஆங்கில மகாகவியாகிய மில்டன் நம்பியிருந்தாரென்றும், அதனால் அவர் "சுவர்க்க நீக்கம்" (Paradise Lost) என்னும் பெருங் காவியத்தை எழுதிப் புகழ்படைத்தனர் என்றும் கற்றோர் சொல்வர்.

நமது தமிழ்மொழியிலுள்ள நல்ல நூல்களில் சரித்திர சம்பந்தமானவை மிகச் சிலவாம். இதிகாச புராணங் களும், தலபுராணங்களும், காவியங்களும், நீதிநூல்களும் பலவாம். தற்காலத்திற் கிளம்பும் புதுவல்களோ கணக்கில் அடங்கா. ஆதலின் இவற்றை எழுதுவதினும் ஓர் இந்திய வீரரின் சரித்திரத்தை எழுதுதல் நலமென்றெண்ணி இதை வரையலானேன்.

இந்நூலின் முன்னேற்றத்துக்கான விஷயங்கள் இருப்பின் அவற்றை வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டு அடுத்த பதிப்பிற் சேர்த்துக்கொள்வேன்.

பசுமலை,
1—6—29

நே. ரா. சுப்பிரமணியன்.



சிவாஜி சரித்திர விளக்கப் படம்.

பொருள் அடக்கம்.

ஸ்ரீ

சிவாஜீ விஜயம்.

1. மகாராஷ்டிரர்.

நமது தாய்நாடான இந்தியாவில் மிகப் பழையகாலந் தொட்டுச் சமீபகாலம் வரை வாழ்ந்து, தம் புகழை நாட்டியிருந்த இனத்தார் பற்பலர் ஆவர். அவர்களுள் சரித்திரக்காரருக்குத் தெரிந்தமட்டில் தமிழர், ஆந்திரர், சாளுக்கியர், ராஜபுத்திரர், மகாராஷ்டிரர் என்பவரே முக்கியமானவர். அவர்கள் எல்லோரும் தனித்தனியே ஒரு பாஷையையும், ஒரு நாகரிகத்தையும் உடையவர்கள். அவர்களில் தமிழர் முதன்மையானவர் என்னலாம். கரிகாற்பெருவளத்தான், சேரன் செங்குட்டுவன், ராஜ ராஜ சோழன், ராஜேந்திர சோழதேவன், முதலாம் குலோத்துங்க சோழன் என்ற அரசர்கள் தமிழ்நாட்டு மன்னவர்களில் மிகவும் புகழ்படைத்தவர்கள்.

பூர்வீக தமிழரசர் காலத்துக்குப் பின், ஆந்திரர் என்ற தெலுங்குநாட்டவர் பிரபலமடைய ஆரம்பித்தனர். அசோகருடைய காலத்துக்கு

ஸ்ரீ

சிவாஜி விஜயம்.

---

1. மகாராஷ்டிரர்.

நமது தாய்நாடான இந்தியாவில் மிகப் பழையகாலந் தொட்டுச் சமீபகாலம் வரை வாழ்ந்து, தம் புகழை நாட்டியிருந்த இனத்தார் பற்பலர் ஆவர். அவர்களுள் சரித்திரக்காரருக்குத் தெரிந்தமட்டில் தமிழர், ஆந்திரர், சாளுக்கியர், ராஜபுத்திரர், மகாராஷ்டிரர் என்பவரே முக்கியமானவர். அவர்கள் எல்லோரும் தனித்தனியே ஒரு பாஷையையும், ஒரு நாகரிகத்தையும் உடையவர்கள். அவர்களில் தமிழர் முதன்மையானவர் என்னலாம். கரிகாற்பெருவளத்தான், சேரன் செங்குட்டுவன், ராஜ ராஜ சோழன், ராஜேந்திர சோழதேவன், முதலாம் குலோத்துங்க சோழன் என்ற அரசர்கள் தமிழ்நாட்டு மன்னவர்களில் மிகவும் புகழ்படைத்தவர்கள்.

பூர்வீக தமிழரசர் காலத்துக்குப் பின், ஆந்திரர் என்ற தெலுங்குநாட்டவர் பிரபலமடைய ஆரம்பித்தனர். அசோகருடைய காலத்துக்கு

ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு, அவர்கள் தென்னிந்தியாவிலும், வட இந்தியாவிலும் பல பாகங்களை வென்று ஆண்டுவந்தனர். அவர்களுக்குப் பின் சாளுக்கியரும், அவர்களுக்குப்பின்னே ராஜபுத்திரரும் வீரம் விளைத்து நாடுகளை வென்று விளங்கல் ஆயினர். அவர்களில் ராஜ புத்திரர்கள் கி. பி. எட்டாவது நூற்றாண்டு முதற்கொண்டே அயல் நாட்டுப் பகைவரை எதிர்த்துச் சிறந்த வீரர்களென்று பெயர் படைத்தனர். மொகலாய இராஜ்யம் ஓங்கத் தலைப்படும் முன் அவர்களை எதிர்த்துத் தடுக்க முயன்றவர்களும் ராஜ புத்திரர்களே; அதுமட்டுமின்றி இந்தியர்களில் அக்காலத்தும் இக்காலத்தும் எக்காலத்தும் சிறந்த வீரர்களென்று புகழப்பட்டவர்களும் அவர்களே யென்றாலும் அது மிகையாகாது.

மகாராஷ்டிரரோ, கி.பி.பதினேழாவது நூற்றாண்டில் ஒன்றுபட்டு, வீரத்தாலும், பகைவரை வென்று நாடு சேர்க்கும் வலிமையாலும், இராஜ்யம் ஆளும் திறமையாலும் புகழ் பெற்று விளங்கத் தொடங்கினர். அக்காலத்திருந்த அவர் பெருமைகளிற் சில இக்காலத்து மறைந்துபோயின. ஆயினும் ஒற்றுமையும், வீரமும், கட்டுப்பாடும், இனந்தழுவலும் ஆகிய முக்கியமான குணங்கள்

இன்னும் அவர்களிடம் நிலைத்திருக்கின்றன. மகாராஷ்டிரர்கள் வாழ்ந்துவந்த தேசம் "மகாராஷ்டிரம்" என்னப்படும். அந்தத் தேசம் வடக்கே சாத்பூராமலையில் இருந்து, தெற்கே கோவாநகரம் வரையில் நீண்டு மேற்கே அரபிக்கடல் தொடங்கிக் கிழக்கே நாற்பதுமுதல் ஐம்பது மைல் தூரம் வரையிலும் பரவியிருப்பது. விந்த மலைத் தொடரிலிருந்து பிரிந்து தெற்கில் ஏறக்குறையக் குமரிமுனை வரையில் நீண்டிருப்பதான மேற்குமலைத்தொடர்ச்சி அதனூடே தென்வடலாகச் செல்லுகின்றது. அம்மலைத்தொடர் சாதாரணமாகப் பல இடங்களிலும் 4000 அடி முதல் 5000 அடி வரை உயர்ந்திருக்கின்றது. அது கடற்கரையிலிருந்து சிறிது தூரம் விலகியே இருக்கின்றது. அதற்கும் கடலுக்குமிடையே சமவெளியென நீண்டதோர் பிரதேசம் உண்டு. அதற்குக் கோங்கணம் என்று பெயர்.

கொங்கணத்திற்குக் கிழக்கிலுள்ள மகாராஷ்டிர தேசம் முழுவதும் மலையடர்ந்தது; பல பள்ளத் தாக்குகளையும், குறுகிய கணவாய்களையும், காடுகளும், புதர்களும், செறிந்த மலைப் பக்கங்களையும் உடையது. ஆதலின் அந்நாடு, சுதந்தரமாய் வாழத்தக்க வீரரான ஓரினத்தார் இருப்பதற்கு இயற்கையிலேயே பல விதத்திலும் ஏற்றதா

கும். அங்குள்ள ஒவ்வொரு மலைச்சிகரத்திலும் ஒவ்வொரு கோட்டையுண்டு. அதன் அதிகாரிக்கு அதன் கீழுள்ள சில கிராமங்களில் வாழ்ந்து வந்த குடிகள் கட்டுப்பட்டவரா யிருந்தனர். இவ்வாறு அந்நாடு முழுவதிலும் பல மலைக்கோட்டைகளும் சிற்றரசர்போன்ற பல தலைவரும் உண்டு. மலைச்சாரல்களிலும், பள்ளத்தாக்குகளிலும் இருந்த சிற்றூர்களும், கிராமங்களுமேயன்றி, அங்கு அக்காலத்தில் பெரு நகரங்கள் பல இருந்ததாகத் தெரியவில்லை.

மகாராஷ்டிரர்கள் சாதாரணமாகக் குள்ளமான தோற்றமுடையவர்கள்; எனினும் புஜபல பராக்கிரமங்களிலும், சுறுசுறுப்பு, உழைப்பு, தந்திரமாகக் காரியம் சாதித்தல் முதலிய குணங்களினும் மிகவும் சிறந்தவர்கள் என்பதற்கு ஐயமில்லை.

அவர்கள் நாடு, மலையடர்ந்ததா யிருந்தமையால், பயிர் விளைத்தல் முதலிய எக்காரியத்தை முடிக்கவேண்டுமாயினும், அவர்கள் உடலை வருத்திப் பொறுமைபூண்டு அரும்பாடு படவேண்டியது அவசியமாயிற்று. ஆதலின் கஷ்டங்கள் பல அடுக்கி வந்தாலும், அவைகளைப் பொறுத்துக்கொண்டு எடுத்த காரியத்தை அடுத்து முயன்று முடிக்கும் மனவலிமையும், உடல்

வலிமையும் ஒருங்கே பழக்கத்தால் அவர்கள் பெற்றவராயினர். பொதுவாக எவ்விடத்திலும் மலைநாட்டார் யாவரும் தமக்கு நேரும் கஷ்டங்களால் மனஞ்சலியாமல் முயன்று காரியம் முடிக்கும் வன்மையுடையவர்களாய் இருக்கின்றார்களல்லரோ? ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஸ்விஸ் ஜாதியாரும், நம் நாட்டுக்கு மேற்கிலுள்ள ஆப்கானியரும் அப்படிப்பட்டவர்களே. அவர்கள் அவ்வாறிருப்பதற்கு முக்கிய காரணம் அவர்கள் தேசத்தின் இயல்பே ஆம். அவர்களைப் போலவே மகாராஷ்டிரரும் போர்வீரர்களுக் கமைந்த மேற்சொன்ன நல்ல குணங்கள் அமையப்பெற்றார்கள்.

ஆகவே, அவர்களிற் பலரும் நெடுங்காலமாகப் பீஜப்பூர், ஆமத்நகர சுல்தான்களுடைய சேனைகளில் தங்கள் இனத்தலைவர்களின்கீழ் வீரராய்ச் சேர்ந்திருந்தனர். அதனால் அவர்கள் போர்ப்பழக்கமுள்ள சிறந்த வீரர்களாயினர். அந்நாட்டிலுள்ள பல மலைக்கோட்டைத் தலைவர்களும் தங்களுக்கடங்கிய மகாராஷ்டிர வீரரோடு பீஜப்பூர், ஆமத் நகரச் சேனைகளிற் பொருளுக்காகச் சேர்ந்து சண்டை செய்வது வழக்கமாயிருந்தது. பதினாறும் நூற்றாண்டின் முடிவில் பீஜப்பூர் சமஸ்தானத்தில் மகாராஷ்டிர சேனாதி

பதிகள் எழுவரும், ஆமத்நகரில் இருவரும் இருந்தனரென்று தெரிகின்றது. அவர்களிற் பலர்க்கும் அவ்வப்போது பணங்கொடுப்பதற்குப் பிரதியாக,ஸ்திரமான கிராமங்களும்,நிலங்களும் விடப்படுதலும் உண்டு. அவைகளுக்கு ஜாகீர்கள் என்றும், அவைகளை அனுபவித்தவர்களுக்கு ஜாகீர்தார்கள் என்றும் பெயர்கள் வழங்கிவந்தன. மேலும் அந்தச் சுல்தான்கள் ஜாகீர்களேயன்றிப் பரம்பரையாக வரும் கௌரவப் பட்டங்களும் அவர்களுக்கு அளித்து வந்தனர்.

இவ்வாறு முகமதிய சுல்தான்கள் இடைவிடாது ஒருவரோடொருவர் செய்துவந்த போர்களால், மகாராஷ்டிரர்கள் போர்ப்பயிற்சிபெற்று வல்லவர் ஆனார்கள். எனினும் கணக்கு, ராயசம் முதலியன எழுதலும், கிராமாதிகாரிகளாய் இருத்தலும், அமைச்சர்களாயிருந்து அரச காரியங்களை நிர்வகித்தலும் போன்ற தொழில்களையும் அவர்கள் அறியாதவர் அல்லர். போர்ச் சேவகர்களாக அவர்கள் முகமதிய சுல்தான்களிடம் சேவித்து வந்தது போலவே, அவர்களிற் பலரும் அவர்களிடம் கணக்கர்களாகவும், உத்தியோகஸ்தர்களாகவும் இருந்து வந்தார்கள். ஆதலின் பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே மகாராஷ்டிரர்கள் இராஜ்யங்களை வெல்லவும், அவை

களை ஆளவும் ஏற்றவராய் இருந்தனர் என்று சொல்லலாம்.

அப்போது அவர்கள் எல்லோரையும் அடக்கி ஒன்று படுத்தி ஒரு இராஜ்யம் ஸ்தாபிக்கும் காரியத்தில் செலுத்துவதற்கு ஒரு சிறந்த தலைவர்மட்டும் ஏற்பட வேண்டியதாயிற்று. அப்படிப்பட்ட தலைவர் ஒருவர் விரைவில் தோன்றினார். அவரைப்பற்றியே இந்த நூல் கூறும்.

---

2. முன்னோர் வரலாறு.

முகமதியர்கள் வட இந்தியாவைக் கைப்பற்றிய பின், அங்கிருந்த ராஜ புத்திரர்கள் ராஜபுதனத்தின் நடுவில் பல சிறு இராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு ஆட்சி புரிந்தனர். அவற்றில் உதயபுரி என்னும் இராஜ்யம் ஒன்றுண்டு. அங்கொரு காலத்தில் ஆண்ட இராணு பீமராஜர் என்னும் அரசருக்கு ராம்ஸிங், பாபாஸிங் என்னும் இரு மக்கள் பிறந்தனர். பீமராஜருக்குப் பிறகு, ராம்ஸிங் இறைவர் ஆனார். தம் தமையன் ஆட்சிக்குள் வாழ விரும்பாத பாபாஸிங் தக்கணமடைந்து நருமதைநதி தீரத்தில் அரசு செலுத்தி வந்த ராஜா ஆலிமோகன் என்ற மன்னனிடம் ஏவல் புரிந்து வந்தார். ஆலிமோகன் இறந்தபின்,

அவனுடைய மக்கள் இளஞ் சிறுவரா யிருந்த மையின், பாபாஷிங்கே நாட்டில் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்து அரசியலை நடத்தினர். அவர் அவ்வாறு நடத்திவரும் நாளில், அவருக்கு, பாபாஸிங்பான்ஸ்லே என்னும் பெயரிட்டுக் குடிகள் யாவரும் அவரைக்கொண்டாடினர். பான்ஸ்லே என்னும் சொல்லுக்குத் துஷ்டரை வாட்டுவோன் என்பது பொருளாம்.

ஆலிமோகன் மக்களுக்குத் தக்க வயது வந்ததும் நாட்டை மூத்தவனுக்கு அளித்து, சிறந்த புத்திமதிகளைக் கூறிவிட்டு, பாபாஷிங் தெற்கு நோக்கிச் சென்றார். அவரே பான்ஷ்லே குலத்துக்கு மூலபுருஷர்.

பாபாஷிங் பான்ஷ்லேக்கு நான்கு மக்கள் பிறந்தனர். அவர்களில் மூத்தவரான மாலோஜிக்கு ஷாஜி, ஷரபோஜி என்னும் இரு புதல்வர் பிறந்தனர். நான்காவது மகனான விடோஜி என்பவருக்கு எட்டு மக்கள் பிறந்தனர். அந்த எண்மரில் கேளோஜி, மன்னுஜி ஆகியோர் பீஜப்பூர் சுல்தானிடம் காரியம் பார்த்துவந்தனர். அக்காலம் வட இந்தியாவில் மொகலாய பாதுஷாவாயிருந்தவர் அவர்களை மரண தண்டனைக் குள்ளாக்கினர் என்பர். மாலோஜி தேவகிரி மாகாணத்

திலுள்ள வீரல் என்னும் ஊரில் தங்கித் தம் மனைவிமக்களுடன் விவசாயஞ்செய்து காலங் கழித்துவந்தனர். அங்ஙனமிருந்த அவ்விருவ ரும் அந்நாட்டிலுள்ள சிங்கேடு என்னும் சிற்றூ ரிலிருந்த லக்கோஜி யாதவராவ் என்னும் வள்ள லைச் சார்ந்தனர். அவ்வள்ளல் ஆமத் நகர் சுல் தானுடைய சேனைத் தலைவரில் முதன்மைபெற் றவர். அவர் அவ்விரு சகோதரரையும் அன்பு டன் ஆதரித்துத் தம் இல்லத்துக்கு அடிக்கடி வரவழைத்து அவருடன் போஜனம் செய்வது வழக்கம். மாலோஜி, தீபாபாய் என்னும் மனைவி யை மணந்துகொண்டிருந்தனர். அத் தம்பதிக ளின் மனம், பிள்ளையில்லாத குறையால் நெடு நாள் சள்ளைப்பட்டது. பன்னெடுநாள் அவர்கள் நோன்பாற்றினர்.

அதன் பயனாக அவர்களுக்கு கி. பி. 1594-ம் வருஷம் புத்திரப்பேறு உண்டாயிற்று. பிள்ளை பிறந்த பதினோராம் நாளில் அவனுக்குப் புண் ணியாவாசனம் செய்ய ஏற்பாடுகள் நடந்தன. பெரியோர் அக்குழந்தைகளுக்கு ஷாஜி, ஷர போஜி என்று நாமகரணஞ்செய்தனர். அவ்விரு புதல்வரையும் பெற்றோர் நேசிப்பது இயற்கை யாயினும், யாதவராவ் பெற்றோரினும் உற்றோ ராக அவர்களை அன்புடன் போற்றி வந்தனர்.

அவர்களில் ஷாஜி அதிகச் சாந்தமும், அழகு முடையவராக இருந்தபடியினுல், அவரை அவர் அதிகமாகப் பாராட்டி வந்தனர். மாலோஜியும், விடோஜியும் தம்மிடம் வந்தது முதல், யாதவ ராவுக்குச் செல்வமும், செல்வாக்கும் அதிகரித்து வந்தன. அதற்கு அவ்விரு சகோதரரே ஏதுவா யிருந்தனர். அன்றியும் நீண்டகாலம் பிள்ளையில் லாத யாதவராவுக்கு அவர்கள் வந்த பிறகுதான் ஒரு புத்திரி பிறந்தாள். அம் மகளுக்கு ஜீஜாபாய் என்று அவர் பெயரிட்டனர். இக்காரணங்களால் அவ்விரு சகோதரரையும் அவர் மிக்க அன் புடன் நடத்தி வந்தனர்.

ஷாஜிக்கு ஐந்துவயதாயிற்று. அச்சமயம் வழக்கமாக வருடந்தோறும் மகாராஷ்டிரர்கள் கொண்டாடும் ஹோளிப்பண்டிகை * வந்தது. அன்று பிரபுக்களை ஏனையோர் சென்று கண்டு கொள்வது வழக்கம். ஆதலின் மாலோஜி, ஷாஜி யை அழைத்துக்கொண்டு யாதவராவைக் காணச் சென்றார். அங்கே ஷாஜியும், மூன்றுபிராயமுள்ள ஜீஜாபாயும் மழலையாடி, பெற்றோரும் பிறரும் கண்ணும் செவியும் மனமும் களிக்க விளையாடி னர். அவர்கள் இருவரையும் கண்டு களித்த யாத வராவ் தம் மகளை ஷாஜிக்கு மணம் முடித்தல் ஒத்திருக்குமெனப் பலர் கூடிய சபையில், தம்மை

---

* இதுவே தமிழ்நாட்டில் காமன் பண்டிகை என்பதாம்.

மறந்து வாய்விட்டுரைத்தனர். மாலோஜியும் மனங்களித்தார். ஆயினும் யாதவராவின் காதலி இயற்கையில் செருக்குள்ளவள் ஆதலின், அவர் சொல்லிய சொற்களைக் கேட்டு முணுமுணுத்தாள். யாதவராவும் தாம் அவ்வாறு கூறியதற்காக வருத்தப்பட்டார். பிறகு அவர் சொன்ன சொல் மாறி நடப்பதைக் கண்ட மாலோஜி மனம் வேறுபட்டுத் தமது ஊர் நோக்கிச் சென்றுவிட்டார்.

அங்கு அவர் வசித்துவரும் நாளில், அவருக்குப் பெரும் செல்வம் கிடைத்தது. அது கிட்டியதற்குப் பல காரணங்கள் கூறுவர்: சிலர் மகாராஷ்டிரரின் குலதெய்வமான பவானிதேவியின் அருளால் அவருக்கு அது கிடைத்ததென்றும், வேறு சிலர் ஆமத் நகரத்தில் மாலோஜியும் விடோஜியும் கொள்ளையடித்த பொருள் அது என்றும் கூறுவர். வேறு கூறுவாருமுளர். அது எவ்வாறாயினும், மாலோஜி செல்வம் பெற்றுப் பிரபுவாக ஆயினபிறகு அச் செய்தியை அறிந்த யாதவராவ், தமது மகளை ஷாஜிக்கு மணம் முடித்துக் கொடுக்க நிச்சயித்து அவ்வாறே அதனை வெகு விமரிசையாக நடத்தினர்.

3. சிவாஜியின் ஜனனம்.

ஷாஜிக்கு மணம் நடந்தபின் கொஞ்சக் காலத்தில் அவருடைய தந்தையும், சிறியதந்தையும் காலமாயினர். அப்போது ஷாஜிக்கு வயது இருபதே. அச்சமயம் ஷாஜியும் அவர் மாமனாராகிய யாதவராவும் ஆமத்நகர் சமஸ்தானத்தில் பெரிய உத்தியோகங்கள் வகித்திருந்தனர். இங்ஙன மிருக்கையில், ஜீஜாபாய்க்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு ஸாம்பாஜி என்று பெற்றோர் நாமகரணம் செய்தனர். நாளாக ஆக ஷாஜியின் அதிகாரம் அதிகப்பட்டது.

அப்போது இருந்த ஆமத்நகர் சுல்தான் காலகதியடைந்தான். அவன் மக்கள் இருவரும் சின்னஞ் சிறுவராக இருந்தமையின், அந்தச் சுல்தானுடைய மனைவி தன் மக்களையும் இராஜ்யத்தையும் கவனித்து வரத்தக்க காரியஸ்தர் ஷாஜியே என்று அறிந்து அவரைத் திவானாக ஏற்படுத்தினள்.

ஷாஜி அரசாங்க காரியங்களைச் செம்மை பெற நடத்திவந்ததால், யாவரும் திருப்தியடைந்தனர். ஆயினும் யாதவராவுக்கு மட்டும் ஷாஜியிடம் பொறாமை உண்டாயிற்று. அவர் நெடுங்காலம் அங்கு அதிகாரம் செலுத்தியவர் அல்லரோ? அப்படிப்பட்டவருக்குத் தம்மினும்

மேலானவரான ஒருவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பது ஏற்கவில்லை. ஆதலால் ஆமத்நகரின் மீது படையெடுக்குமாறு யாதவராவ் டில்லியில் இருந்த மொகலாய பாதுஷாவுக்கு ஒரு அந்தரங்கமான ஆளை யனுப்பினர். டில்லி பாதுஷா ஒரு பெருஞ் சேனையை ஒரு தலைவன்வசம் அனுப்பி ஆமத்நகரை எதிர்க்கச் சொன்னார்.

இங்ஙனம் ஆமத்நகரை நோக்கி வந்த மொகலாய சேனையை யாதவராவ் தமது பரிவாரத்துடன் எதிர் சென்றழைத்தனர். யாதவராவ் செய்த பாதகத்தொழிலை ஷாஜி உணர்ந்தனர். அவர் அந்தச் சுல்தானுடைய மனைவி மக்களை மலைக்கோட்டைகளிற் பத்திரப்படுத்தி வைத்துவிட்டுப் போருக்குப் புறப்பட்டனர். யாதவராவும் மொகலாயப் படைவீரரும் ஆமத்நகர் சுல்தான் குடும்பத்தார் தங்கியிருந்த மஹாலி என்ற கோட்டையை முற்றுகை செய்து ஆறுமாதகாலம் அரும்போர் புரிந்தனர். தமது பலம் தளர்ந்திருப்பதை உணர்ந்த ஷாஜி, பீஜப்பூர் சுல்தானை உதவி புரியுமாறு வேண்டினர். அதற்கிணங்கிய அந்தச் சுல்தான் உதவிய படையின் துணையால் அவர் பகைவர் படையைப் பின்னிடச் செய்துவிட்டு, தமது மனைவியுடன் பீஜப்பூர் நோக்கி விரைந்து சென்றனர்.

அப்பொழுது ஜீஜாபாய் பூரண கர்ப்பிணியா யிருந்ததால், பிரயாணத்தின் நடுவே மயக்கப் பட்டு விழுந்தனள். யாதவராவோ பெரும் படை யோடு அவரைப் பின்பற்றி வருகிறூர். ஆதலால் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு அவர் ஓட வேண்டி யிருந்தது. என்ன செய்வார் ஷாஜி! ஜீஜாபாயை அங்கு இருத்திவிட்டுச் சென்றூல், பின் தொடர்ந்து வரும் யாதவராவ் தமது மக ளைக் காத்துக்கொள்வர் என்றெண்ணி அவளிடம் செய்தியை யெல்லாம் எடுத்துச் சொல்லித் தேற்றி அங்கே விட்டுப் பீஜப்பூர் சென்றூர்.

ஷாஜி எதிர்நோக்கிய வண்ணமே யாதவ ராவ் பின்பற்றி வந்தனர். வழியில் யாரோ ஒரு பெண் புலம்பும் குரல் கேட்டு, அங்குப் போய்ப் பார்த்தனர்; அங்குத் தமது அருமையான ஒரே மகள் இருக்கும் நிலையைக்கண்டு அவர் வருந்தி னர். பிறகு அவர் தமது அந்தரங்க வீரர்களில் ஐந்நூறு பேர்களைத் துணை சேர்த்து அவளை ஷாஜிக்குச் சொந்தமான சிவநேரிக் கோட்டைக்கு அனுப்பிவிட்டனர்.

அக்கோட்டையில் இருந்த பவானிதேவி மகா சக்தி வாய்ந்தவள். பக்தர் விரும்பும் வரங் களை அருளும் கற்பதரு. அந்தத் தேவியை

ஜீஜாபாய் தினந்தோறும் தரிசித்து வந்தாள். அவள் இயற்கையிலே தெய்வபக்தி வாய்ந்தவள். ஆகையால் தனக்குப் பிறப்பது ஆண் குழந்தையா யிருந்தால் அதற்குச் சிவ நாமம் வைப்பதாய்ப் பிரார்த்தித்துக் கொண்டாள். அவள் அக்கோட்டையை அடைந்த சில நாட்களிற் பவானி அருளால் கி. பி. 1627-ல் வைகாசி மாதம் அவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையே பிற்காலத்து இந்து மன்னர்களில் பலமும், பல நலமும், சீரும் பேரும் பெற்று விளங்கிய சிவாஜி மகாராஜா ஆயிற்று. இவருக்கு இப்பெயர் வந்ததற்குக் காரணம் அவர் அன்னை செய்துகொண்ட பிரார்த்தனையே ஆகும்.

ஷாஜி யாதவராவை விட்டுத் தப்புவதற்குப் பீஜப்பூர் சென்றார் அல்லரோ? யாதவராவ் தாம் எதிர்பார்த்தபடி அவரை அங்குக் காணமுடியவில்லை. ஷாஜி பீஜப்பூர் அடைந்து, அதன் சுல்தான் கொடுத்த ஜாகீரும், நாயக் என்னும் பட்டமும் பெற்றார். ஷாஜி பீஜப்பூர் சென்றதால் ஆமத்நகரத்தில் திவான் இல்லை. அந்த உத்தியோகத்தை மாலிக் ஆம்பர் என்பவர் பெற்றார். அவர் மிக்க சமர்த்தர். இது நிற்க, ஷாஜியை முன் பிடிக்க முடியாது திரும்பிய மொகலாயப்படை அவரைப் பிடிக்கும் உறுதியுடன் தக்கணத்தில்

சென்றது. அப்படையை மாலிக் ஆம்பர் எதிர்த்து வெற்றிபெற்று, அதனை ஓட ஓட அடித்தார். ஆயினும் பின்பு, அவர் பக்கத்திலுள்ள இடங்களைக் கொள்ளையடித்துக்கொண்டு முடிவில் பீஜப்பூர் இராஜ்யத்தைச் சேர்ந்த நகரங்களிலும் கை வைத்தனர். அப்போது ஷாஜி மற்ற சேனைத் தலைவருடன் சேர்ந்து போர் செய்து மாலிக் ஆம்பரை ஓடும்படி அடித்தனர். அதனை அறிந்த பீஜப்பூர் சுல்தான் அவருக்குப் பின்னும் சில ஜாகீர்களும் ராஜா என்ற பட்டமும் மனமுவந்து அளித்தனர்.

இவைபோன்ற பல குழப்பங்கள் தெற்கே நிகழ்ந்துகொண்டே இருந்தன. ஆதலால், பீஜப்பூரையும் ஆமத்நகரையும் வென்று தமக்கு உட்படுத்தினாலன்றித் தமதாட்சி சீர்பெறுதென்று அக்காலம் மொகலாய பாதுஷாவாக இருந்த ஷாஜஹான் நிச்சயித்தனர். முதலில் பீஜப்பூரை எதிர்க்க 40,000 பேருள்ள ஒரு படையை அவர் அனுப்பினார். ஷாஜி மொகலாயப் படையின் பெருக்கத்தையும், தமது படையின் சுருக்கத்தையும் உணர்ந்து வெகு தந்திரமாகப் போரை நடத்தினர். ஷாஜியை எப்படியேனும் தொலைக்க வேண்டுமென்று எண்ணிய பாதுஷா, பீஜப்பூர் சுல்தானுடன் 1636-ல் ஒரு உடன்படிக்கை

செய்துகொண்டார். அதன் நிபந்தனைகளில் ஒன்று ஷாஜியை அந்தச் சமஸ்தான உத்தியோகத்தில் வைத்திருக்கக்கூடா தென்பதாம்.

சின்னாட்களுக்கெல்லாம் மொகலாயர் ஷாஜியைப் பிடித்து அவர்வச மிருந்த ஆறு துர்க்கங்களையும் பறித்துக்கொண்டு பீஜப்பூர் சமஸ்தானத்தில் உத்தியோகம் செய்யுமாறு அனுமதித்தனர். அதன் பிறகு ஷாஜிக்குப் புனாவும், சுபாவுமே மீந்திருந்தன. ஆமத்நகர் சின்னாட்களிலே தாழ்நிலையுற்றது. எனவே, டில்லி பாதுஷா தக்கணத்தைப்பற்றிய கவலை ஒரு சிறிதுமின்றிச் சந்தோஷமா யிருந்தனர்.

ஜீஜாபாய் சிவாஜியைப் பெறுமுன், பல துன்பங்களை அனுபவித்தனள் என்று கூறினோம். அப்போது அத்துன்பத்துக்கு மொகலாயரே காரணமென்றெண்ணி, அவர்கள் மேல் அவள் வெறுப்புற்றிருந்தனள். மிக்க செல்வத்தில் வாழ்ந்தவளாதலால், முகமதியரையே சார்ந்து ஷாஜி பிழைப்பது அவளுக்கு விருப்பமில்லை. இங்ஙனமிருக்க ஷாஜியைப் பிடிக்கச்சென்ற மொகலாயர்கள் ஜீஜாபாயையும் சிவாஜியையும் ஒருசமயம் சிறைப்படுத்தினர். அதனால் ஷாஜி வலியவந்து சரணமடைவர் என்று அவர்கள் நினைத்தனர் போலும்.

இது நிற்க, ஜீஜாபாயை மணந்த நாள் தொடங்கித் துன்பத்தையே அனுபவித்து வந்ததால், ஷாஜி வெறுப்படைந்து துக்காபாய் என்னும் மற்றொருபெண்ணைக் கல்யாணம் செய்து வாழ்ந்து வருகையில், பீஜப்பூர் சுல்தானுக்குப் பல வெற்றிகளை உண்டாக்கி, அவற்றின் பயனாக, கோவா, பெங்களூர், பாராக்கோட்டை, வேலூர், ஆரணி என்னும் பல இடங்களையும் ஜாகீராகப் பெற்றனர். அன்றியும் அவர் சதாராநகரை யடுத்த சூரார் ஜில்லாவிற்குத் தலைவராகவும் நியமிக்கப் பெற்றார்.

இதற்குள் சிவாஜிக்கு வயது பத்தாயிற்று. ஜீஜாபாய் தன் மகனை அழைத்துக்கொண்டு, பீஜப்பூரை யடைந்து, சாயிபாய் என்னும் பெண்ணை அவருக்கு மணம் செய்து வைத்தாள். ஷாஜிக்கு இரண்டாவது மனைவியிடம் வெங்காஜி என்ற ஒரு மகன் பிறந்தான். ஷாஜியின் குடும்பத்தார் எல்லாரும் பீஜப்பூரில் இனிது வசித்து வந்தார்கள்.

---

4. சிவாஜியின் இளமைப் பருவம்.

பீஜப்பூரில் தந்தையுடன் வசித்து வந்த போது, ஷாஜி சிவாஜியின் பேச்சுக்களையும்

செயல்களையும் கவனித்து வந்தனர். அவர் நடந்துகொள்ளும் விதத்தைச் சுல்தான் அறிந்தால், தம்மை உத்தியோகத்தினின்றும் நீக்கி விடுவார் என்று ஷாஜி பயந்தார். ஒருசமயம் சில ஆடுகளை ஓட்டிச்சென்ற இறைச்சி விற்போன் ஒருவனை வழிமறித்து, அப்பிராணிகளைக் கொடுங் கொலையினின்றும் சிவாஜி தப்புவித்தனர். மற்றொரு சமயம் ராஜஸபையில் மற்றவர்கள் தலை குனிந்து தாழ்ந்து சலாம் செய்வதுபோற் செய்யாமல், அவர் நிமிர்ந்தபடியே 'சலாம்' கூறினர். சுல்தானுக்கும் அவர் சபையாருக்கும் அவர் செய்கை வெறுப்பை உண்டாக்கிற்று. சிவாஜியை அதன்மேல் அங்கு வைத்திருக்கக் கூடாதென்று ஷாஜி துணிந்து, ஜீஜாபாயையும் அவரையும் 1638-ல் புனா நகரத்துக்குப் போக்கிவிட்டனர்; அவர்களுக்குத் துணைவராகத் தாதோஜி கோன தேவர் என்னும் ஒரு பிராமணரையும் அனுப்பினர்.

அவ்வந்தணர் புனாஜில்லாவில் மல்தான் என்னும் ஊரிற் பிறந்த தேசஸ்த பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். கல்வியிலும், உலகியல் அறிவிலும், வீரத்திலும், அரசியலறிவிலும் மேம்பட்டவர். அவர் புனா நகரை அடைந்தவுடன், அதனை அதிக உன்னத நிலைக்குக் கொண்டு வந்தார்.

இவ்வந்தணரே சிவாஜி என்னும் இளஞ் சிங்கத்தை இளமையிற் புனு நகரில் காத்து வரும் பாரத்தை வகித்தவர். அவரே சிவாஜிக்கும் அவரைச்சேர்ந்த நண்பருக்கும் ஆசிரியராக இருந்து நம் நாட்டு இதிகாச புராணங்களையும், சரித்திர சம்பந்தமான கதைகளையும் அடிக்கடி சொல்லி வந்தார். அங்ஙனம் சொல்லி வருகையிற் பண்டைக் காலத்து வீரர்களின் சாகஸங்களையும் வெற்றிகளையும் கேட்போருக்கு ஆவேசமுண்டாகுமாறு சொல்லக்கூடிய அரிய வன்மை அவரிடம் இயற்கையில் குடிகொண்டிருந்தது.

அவர் எடுத்துக்கூறும் வீரச்செயல்களைக் கேட்கும்போது, சிற்சில சமயம் சிவாஜி மெய்ம் மறந்து ஆவேசம் கொள்வார். அப்போது தாதோஜி, வீடுமர் முதலியோர் உபதேசங்களை அவருக்கு உரைப்பார். இங்ஙனம் தாதோஜி போருக்குரிய வீரத்தையும் அரசநீதியின் சாரத்தையும் இனிது புகட்டினர். சிவாஜிக்கு அவர் எழுதப்படிக்கக் கற்பியாவிட்டாலும், யானையேற்றம், குதிரை யேற்றம், வில்வித்தை, மல்வித்தை முதலிய போருக்குரிய எல்லாவற்றிலும் அவருக்குத் தேர்ச்சியை உண்டாக்கினர்.

சுத்தவீரர்களின் வெற்றியையும் புகழையும் கூறும் பாடல்களை நாடோறும் சிவாஜி பாடிக்



புரந்தரன் கோட்டை. (பக்கம் 28.)

களிப்பதுண்டு. அவ்வீரர்களைப்போல் தாமும் கீர்த்தி அடையவேண்டுமென்னும் அவா அவருக்குப் பூர்த்தியாயிருந்தது. ஆதலால் அவர் தம்மை யொத்த நண்பரிடம் அருச்சுனனைப்போல் அரும்போர் செய்து மகாராஷ்டிர நாட்டை மகா உன்னத நிலையில் வைத்து ஆளவேண்டுமென்று வெளியிட்டு வந்தனர். அவர்களும் சிவாஜியோடு ஒருமனப்பட்டிருந்தனர்.

இளமையிற் சிவாஜி தம் நண்பருடன் இரவு பகல் என்னும் வரம்பின்றிக் குறுகிய வழிகளை யுடைய மரமடர்ந்த காடுகளிலும், இருளடைந்த குகைகளிலும், பெரிய ஆற்றங்கரைகளிலும் அடிக்கடி சஞ்சரித்து வந்தனர். அப்படிச் செய்து வந்ததால், அவருக்குத் தெரியாத இடம் அந்த நாட்டிலில்லை. அன்றியும் உடற் சோர்வு, மனத் தளர்வு முதலியவைகளைத் தாங்கும் இயல்பும் அவருக்கு உண்டாயிற்று.

புனவைச் சுற்றிப் புரந்தரன் கோட்டை முதலிய பல மலைக்கோட்டைகள் உண்டு. அவைகளுக் குரியவனான பீஜப்பூர் சுல்தான் அவைகளை நன்கு காப்பாற்றவில்லை. அவர் வேறு காரியங்களைக் கவனித்துக்கொண்டிருந்தனர். ஆதலால் அக்கோட்டைகளைத் தாம் கைப்பற்றினால், பிற் காலத்தில் அவை தமக்குப் பாதுகாப்புக்குரிய

அரண்களாகுமென அறிந்து, சிவாஜி அவற்றைக் கைப்பற்றிக்கொள்ள உறுதி கொண்டனர். அதற்காக அவர் புனாவை யடுத்து வாழ்ந்த மாவிலிகள் என்னும் மலை வாசிகளில் உண்மை உள்ளவர்களைத் தமது கூட்டத்திற் சேர்த்துக்கொண்டு அவர்களுக்குப் படைப்பயிற்சி செய்வித்தனர். மாவிலிகளுக்குக் குலதெய்வம் ரோகீசுவரர். அக்கடவுளுக்கு வேளை தவறாமற் பூஜை புரியுமாறு ஒரு பூசாரியைச் சிவாஜி நியமித்தனர். ஆதலால் அவர்கள் சிவாஜிக்காகத் தமது ஆருயிரையும் ஆர்வமுடன் அளிக்கும் உத்தம ஊழியர்கள் ஆயினர். அவர்கள் சிவாஜியைத் தங்கள் மகாராஜா என்று கூறிக் கொண்டாடினர்.

சிவாஜி செய்துவரும் காரியங்களைப் பீஜப்பூரிலிருந்த தாத்தோஜி தேஷ்பாண்டே என்ற அமைச்சர் கேள்விப்பட்டு, அவருக்கு வேண்டிய உதவி செய்வதாக வாக்களித்தனர். அவர் அங்கிருந்த சுல்தானுடைய முக்கியமான உத்தியோகஸ்தரில் ஒருவர். அவர் கொடுத்த வாக்குறுதியைக் கேட்ட பீஜப்பூர் சுல்தான் அவரைக் கண்டித்தார். அதை அவர் சிவாஜிக்கு அறிவித்தார். சிவாஜி தாம் பீஜப்பூருக்குத் துரோகம் செய்யவில்லையென்றும், ஆனால் மகாராஷ்டிர சாம்பிராஜ்யத்தை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்வதாயும்,

ஆதலால் தாதோஜி தமக்கு உதவிசெய்யவேண்டு மென்றும் வேண்டிக்கொண்டார். அச்சமயம் அவருக்கு வயது பதினறு.

சிவாஜி, தோரணு என்னும் மலைக்கோட்டையை 1646-ல் கைப்பற்றி அதைப் பலப்படுத்தினர். அங்ஙனம் செய்கையில், அதில் அவருக்குப் பெரும் புதையல் அகப்பட்டது. அக்கோட்டையைக் காக்கும் தலைவன் சிவாஜியின் செயலைப் பீஜப்பூர் சுல்தானிடம் தெரிவிக்கச் சென்றான். அதற்குள் சிவாஜி தாம் அக்கோட்டையை நன்ருகப் பாதுகாக்கப் போவதாகவும், அதிகமான கப்பங்கட்டுவதாகவும் சுல்தானுக்குக் கடிதம் விடுத்தனர். அவரும் அதை ஒப்புக்கொண்டு, சும்மா இருந்து விட்டார். அதற்குப் பிறகு 'ராஜகடா' என்று இப்போது பெயர் வழங்கும் கோட்டையைப் பிடித்துக்கொண்டு, அதையும் செப்பனிட்டார். தமது படையைப் பெருக்குவதற்குத் தோரணுக்கோட்டையில் அகப்பட்ட புதையலைச் செலவு செய்தார். இது நிற்க. கர்நாடகத்தில் வெற்றி பெற்ற ஷாஜி, தமிழ் நாடுகளிலும் புகுந்தார். தஞ்சையை அக்காலம் ஆண்டுவந்த ரகுநாத நாயக்கரும், செஞ்சியை ஆண்ட வைகுண்ட நாயக்கரும் ஒன்று சேர்ந்து பாண்டிய நாட்டை ஆண்ட திருமலைநாயக்கரோடு அடிக்கடி போர் செய்து

கொண்டிருந்தனர். அவர்கள் யாவரையும் ஷாஜி வென்று பீஜப்பூருக்கு இறை செலுத்துமாறு ஏற்பாடு செய்தனர். அச்சமயம் பீஜப்பூர் சுல்தான் அவருக்குச் சிவாஜியின் நடத்தையைத் தெரிவித்தார்; அன்றியும் ராஜகடாக் கோட்டையை உடனே விட்டுச் செல்லுமாறு சிவாஜிக்குக் கட்டளையிட்டு ஒரு கடிதமும் எழுதினுர்.

அச்சமயம் சிவாஜியின் ஆசிரியராகிய அந்தணர் தாதோஜி மரணத் தறுவாயில் இருந்தார். அவர் தாம் மரிக்குமுன் தமது ஜாகீரைச் சிவாஜிக்கு அளித்துப் பசுக்களையும், அந்தணரையும், விவசாயிகளையும், இந்துக்களையும், முக்கியமாய் மகாராஷ்டிரர்களையும் போற்றி வந்தால் பல நன்மைகள் உண்டாகுமென்று அவருக்கு உபதேசித்தனர். முதலில் சிவாஜியின் செயல்கள் தாதோஜிக்குச் சிறிது வெறுப்பாயிருந்தாலும், அவர் மரிக்கும்போது, சிவாஜி மகாராஷ்டிர சாம்பிராஜ்யத்தை ஸ்தாபிக்கும் வீரரென்று அறிந்ததில் ஐயமில்லை. அவருடைய எண்ணமும் பிற்காலத்தில் சித்தி பெற்றது.

புனுவை யடுத்த கோண்டனுக்கோட்டையை ஒரு முகமதிய அரசரிடம் சிவாஜி பெற்றுக் கொண்டு, அதைப் பழுது பார்த்து, அதற்குச் சிம்மகடா என்ற புதுப்பெயரைக் கொடுத்தார்.

இதற்குத் தென்கிழக்கிலேதான் புரந்தரன் கோட்-டை இருந்தது. அதில் இந்திரனுக்கு ஆண்டு தோறும் ஒரு விழா நடந்து வந்ததால் அதற்கு அப்பெயருண்டாயிற்று. அது ஒரு பலமான கோட்டை. அதைப் பீஜப்பூர் சுல்தான், 'மீலு நாயக்கன்' என்ற ஒருதலைவன் வசம் கொடுத்திருந்தார். அவன் சகோதரரும் அதைப் பெற வேண்டி, சுல்தானை வேண்டினர்.

நெடுநாளாய் அதைக் கைவசப்படுத்த எண்ணியிருந்த சிவாஜி திடீரென ஆங்குச்சென்று அதைக் கைப்பற்றிக்கொண்டு, அதன் தலைவனுக்கும் அவன் சகோதரருக்கும் தகுதியான நிலங்களையும் உத்தியோகங்களையும் கொடுத்தார்; அப்பால் அக்கோட்டையைத் தமக்கு உட்பட்ட ஒரு தலைவன் வசம் ஒப்புவித்தனர்.

---

5. கல்யாணபுரக் கொள்ளை.

புரந்தரன் கோட்டையைச் சுவாதீனப்படுத்திய பிறகு, சிவாஜிக்குக் கையில் கால்காசும் இல்லாதபடி, இருந்ததெல்லாம் செலவானது. அக்காலத்தில் தாணா ஜில்லாவிலிருந்த கல்யாணபுரம் என்னும் ஊர் பலவிதத்திலும் சீரும் செல்வமும் வாய்ந்திருந்தது. அதன் தலைவன் மூலனா ஆமத்

என்னும் ஒரு முகமதியன். அவன் வழக்கம் போல் அதைச் சுற்றிலுமுள்ள இடங்களிலிருந்து இறைவாங்கிப் பீஜப்பூர் சுல்தானுக்குச் செலுத்தி வந்தான். சிவாஜியின் கையிற் பணம் இல்லாதபோது, மூலனு சில காவலர் வசம் ஒரு வண்டியில் மூன்றுலக்ஷம் வராகனைப் பீஜப்பூருக்கு அனுப்பினான். சிவாஜி தமது வீரருடன் சென்று அவ்வண்டியை வழிமறித்து அந்தப் பணத்தையெல்லாம் பறித்துக்கொண்டார்; சுற்றிலுமுள்ள பலகோட்டைகளையும் பிடித்துக்கொண்டார்.

கல்யாணபுரக் காவலனும் சிவாஜியின் சேனைத் தலைவரான அப்பாஜி என்பவரால் சிறைசெய்யப்பட்டான். அவனுடைய மருமகள் யௌவனமும் அழகும் வாய்ந்த உத்தமி. அவளும் சிறைசெய்யப்பட்டு சிவாஜியிடம் அனுப்பப்பட்டனள். சிவாஜி அவளை அன்னைபோல் பாவித்து, மரியாதையோடு நடத்தி, அவளைத் தக்க பாதுகாப்புடன் அவளுடைய உறவினர்பால் அனுப்பினர். இவ்வாறு பிறமாதரைத் தாயென மதிக்கும் இயல்புள்ள சிவாஜியை விரோதிகளும் மெச்சிப் பாராட்டாமலிருக்க முடியுமோ?

சிவாஜி அடித்த கொள்ளையின் செய்தி சுல்தான் காதுக்கு எட்டவே, அவர்கொண்ட கோபத்

திற்கு அளவில்லை. ஆயினும் சிவாஜி அதைப் பொருட்படுத்தாமல் கங்குரி யென்னும் கோட்டையைக் கைவசமாக்கினுர். அதைப் பிடிப்ப தற்கு அவர் செய்த தந்திரம் சாதுரியமானது. வருஷந்தோறும் மழை காலத்தில் அங்கு அடை மழை விடாது பெய்யும். ஆதலால், அதற்கு முன் ஜூலை மாதத்தில் அக்கோட்டை வாசிகள் மலையடி வாரத்திலிருந்து நாணல்களை அறுத்துக் கட்டிச் சுமந்துகொண்டுபோய்க் கூரை வேய்ந்துகொள்வது வழக்கம். சிவாஜியும் அவர் போர்வீரரும் நாணற்கட்டுகளுக் கிடையில் ஆயுதங்களை வைத்துக்கட்டி, அவற்றைச் சுமந்து கொண்டு அக் கோட்டைவாசிகள்போல அதனுள் நுழைந்தனர். கோட்டைக்குள் சென்றதும், சிவாஜியும் அவர் வீரரும் ஆயுதபாணிகளாகி, அதன் தலைவனை வென்று கோட்டையைக் கைவசப்படுத்திக் கொண்டனர். அப்போதுதான் அவர் பவானிதேவியின் பட்டாக்கத்தியை ஒரு அந்தணனிடம் நூறு வராகன் கொடுத்து வாங்கிக்கொண்டனர்.

---

6. ஷாஜியின் சிறை.

தமக்குச் சேரவேண்டிய இறைப்பணத்தைச் சிவாஜி கொள்ளையிட்டதையும், ஒன்றன் பின்

ஒன்றாய்ப் பலகோட்டைகளைக் கைவசப்படுத்திக் கொண்டதையும் அறிந்த பீஜப்பூர் சுல்தான் மிக்க சினங்கொண்டு ஷாஜிக்கு ஒரு கடிதமும் சிவாஜிக்கு ஒரு கடிதமும் எழுதினர். ஷாஜிக்கு எழுதின கடிதத்தில் அவர் சிவாஜியைக் கண்டிக்க வேண்டுமென்றும், சிவாஜிக்கு வரைந்த கடிதத்தில் அவர் உடனே பீஜப்பூருக்கு வர வேண்டுமென்றும் கண்டிருந்தார். சிவாஜியும் தந்தைக்கு ஒரு கடிதமும், சுல்தானுக்கு ஒரு கடிதமும் வரைந்து அனுப்பினர்: தந்தைக்கு விடுத்த முடங்கலில் தாம் கடமையறிந்த மனிதரேயன்றிக் குழந்தையல்லர் என்றும், சுல்தானுக்கு அனுப்பிய இலிகிதத்தில், தமது கைவசமுள்ள கோட்டை முதலானவற்றைத் தமக்கே விடுத்தாலொழிய, பீஜப்பூர் வர முடியாதென்றும் குறித்திருந்தார்.

இங்ஙனமிருக்கையில், ஷாஜியிடம் பொறாமை கொண்ட சிலர், சுல்தானிடம் அவரைப்பற்றிக் கோள் சொன்னார்கள். அன்றியும் ஷாஜியைச் சிறைப்படுத்தினால் சிவாஜி வழிக்கு வருவாரென்றும் சுல்தான் எண்ணினர். ஆதலால் ஷாஜியைச் சிறைப்படுத்தி வருமாறு சுல்தான் பாஜி கோரபடே என்ற சேனைத்தலைவனுக்குக் கட்டளையிட்டனர். அத்தலைவன் ஷாஜியை கி. பி. 1648-ல்

வஞ்சகமாகச் சிறைப்படுத்தினன். அவன் சிறை செய்த விதம் வெவ்வேருகக் கூறப்படுகிறது. ஆயினும் அவர் சிறை செய்யப்பட்டதை ஒருவரும் மறுக்கவில்லை. பிறகு சுல்தான், சிவாஜி தம்மை வந்து பணியுமாறு அவருக்குக் கடிதம் எழுதும்படி சிறையிலிருந்த ஷாஜிக்குக் கட்டளையிட்டனர். அவரும் அங்ஙனமே செய்தனர். அக்கடிதத்திற்கண்ட செய்தியை அறிந்த சிவாஜிக்கு, இது சுல்தான் செய்த சூது என்று நன்கு புலப்பட்டது. ஆயினும் அவர் அதற்குமேற் செய்வதைப்பற்றித் தமது உண்மையான நண்பர்களின் அபிப்பிராயங் கேட்டறிந்தனர்; அப்பால் தம் மனைவியிடமும் வினவினர். அவள் பீஜப்பூருக்குச் செல்வது உசிதமன்று என்றும் வேறு உபாயஞ்செய்து ஷாஜியை விடுவிக்க வேண்டுமென்றும் கூறினள். அதுவே சிறந்தது என்று சிவாஜியின் மனத்திலும் தோன்றியது.

சிவாஜி தாம் செய்யவேண்டியதைக் குறித்து ஓர் இரவு முழுவதும் யோசித்தனர். முடிவில் அவருக்கே ஒரு யுக்தி தோன்றிற்று. உடனே அவர் டில்லி பாதுஷாவுக்கு ஒரு கடிதம் எழுதுவித்தார். அதில் பீஜப்பூர் சுல்தானை மொகலாயர் எதிர்த்துத் தமக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்; அக்கடிதத்தை

அவர் ஒரு ஆளிடம் அனுப்பினர். அதனை டில்லி பாதுஷாவான ஷாஜஹான் பெற்ருர். அவருக்கு ஷாஜியை விடுவிக்கவேண்டு மென்னும் எண்ணமில்லை. ஆனாலும், பீஜப்பூரைத் தொலைக்கவேண்டுமென்ற எண்ண முண்டாயிற்று. உடனே அவர் ஷாஜிக்கு ஒரு அங்கியும், சாம்பாஜிக்கு டில்லியில் ஒரு உத்தியோகமும் அளித்தார். ஷாஜிக்கும், சிவாஜிக்கும் பீஜப்பூர் சுல்தான் மூலம் கடிதங்கள் அனுப்பினர். டில்லி பாதுஷாவே ஷாஜிக்கு உதவி புரிவதைக்கண்ட பீஜப்பூர் சுல்தானுக்குப்பயமுண்டாயிற்று. ஆகையால் சுல்தான் அவரை 1653-ல் விடுதலை செய்தனர். இங்ஙனம் சிவாஜியின் தந்திரம் வெற்றி பெற்றது.

இதன் பிறகு ஆறுவருடங்கள்வரை சிவாஜியும் முற்கூறிய சுல்தானும் போரின்றி இருந்தனர். ஆயினும் ஒருவர்மேல் மற்றொருவருக்கு ஏற்பட்டிருந்த உட்பகை வளர்பிறைச் சந்திரன் போல் தளராமல் பெருகியது. அதன்பிறகு சுல்தான் சிவாஜியை ஒழிக்க எண்ணியது பயனில்லாது போயிற்று. பீஜப்பூர் இராஜ்யத்தில் உட்கலகங்கள் நிரம்பின. அவற்ருற் சிவாஜிக்கு நன்மைகள் உண்டாயின. அவர் அச்சமயம் சில இடங்களைத் தம் வசமாக்கிக்கொண்டார். பிரதாப

கூடா என்னும் கோட்டையைப்பிடித்துக்கொண்டு அதில் ஒரு சிவலிங்கத்தைக் கண்டு, அங்கு ஒரு சிவன் கோயிலும், பவானி ஆலயமும் கோட்டையும் கட்டினார். அது பல இடங்களுக்கு நடு நாயகமாயிருந்ததால், சிவாஜி அதைத் தமது ராணுவ ஸ்தலமாக்கிக்கொண்டார்.

1656-ல் டில்லி பாதுஷாவிற்கும், பீஜப்பூர் சுல்தானுக்கும் போர் தொடங்கியது. முதலில் பாதுஷாவின் மக்களுள் ஔரங்கசீப் என்பவர் கோல்கொண்டாவைப் பிடித்துக்கொண்டு, பின் பீஜப்பூரை எதிர்த்தார். அப்போது சிவாஜி ஔரங்கசீப் பக்கம் கூடினர். அதே வருஷம் பீஜப்பூர் சுல்தான் இறந்தார். அவருடைய ஏக புத்திரருக்கு ஆட்சியிற் பயிற்சியில்லாதது கண்டு, ஔரங்கசீப் அவரைத் தொலைக்க நினைத்தனர்; அங்ஙனமே போர்புரிந்து அச்சிறுவனை வென்றார். அச்சிறுவர் போர்ச்செலவுக்காகக் கோடி ரூபா கொடுத்துச் சமாதானம் செய்துகொள்ள உடன்பட்டார். பீஜப்பூர் இராஜ்யத்தைத் தமது நாட்டோடு சேர்க்கவேண்டுமென்று ஔரங்கசீப் எண்ணினார். ஆதலால் அவர் சமாதானத்திற்குச் சற்றும் இணங்காது போரை நடத்திக்கொண்டிருந்தார். ஆயினும் ஷாஜஹானுக்கு 1657-ல் பலமான நோய் வந்தது. அவருடைய மூத்த


குமாரர் டோரா அரியணை ஏறினர். மற்றவர்கள் அவரோடு கலகமிட்டனர்.

இதற்குள் ஷாஜஹான் சுகமடைந்து, மக்களை அவரவர் இருப்பிடங்களுக்குப் போக ஏவினர். அவர்கள் அங்ஙனம் செய்யப் பின்வாங்கினர். முடிவில் ஒளரங்கசீப் மற்ற மூன்று சகோதரரையும் ஒழித்துவிட்டுப் பாதுஷா ஆனர். சிவாஜி முன் ஒளரங்கசீப் பக்கமிருந்து பீஜப்பூரை எதிர்த்துப் போர் புரிந்தாரேனும், ஒளரங்கசீப் தக்கணத்தில் தமது செல்வாக்கை அதிகப்படுத்துவது அவருக்கு ஒப்பவில்லை. ஆதலால் 1657-ல் ஒளரங்கசீப் டில்லிக்குச் சென்றபின், சில மாதங்களில் சூனர் நகரையும், பிறகு ஆமத்நகரையும் அவர் சூறையாடினர்.

ஒளரங்கசீப் டில்லிச் சமாசாரங்களைக் கவனித்துக்கொண் டிருந்ததாற் சிவாஜியைக் கவனிக்கவில்லை. தக்கணத்தில் செல்வாக்குடனிருந்த பீஜப்பூர் அழிநிலையடைய ஆரம்பித்ததாலும், சிவாஜியை எதிர்க்கக்கூடிய வல்லமை படைத்தவர் இலர் ஆதலாலும், சிவாஜி தாம் கொள்ளையிட்டதைப் பொறுக்குமாறு ஒளரங்கசீபுக்கு ஒரு கடிதம் எழுதினர். அந்தப் பாதுஷாவும் அவரை மன்னித்துத் தம்பால் விசுவாசமாக இருக்கச் சொல்லினர்; அன்றியும் அவர்



அப்ஸல்கான். (பக்கம் 41 பார்க்க.)



பிரதாபகடாக் கோட்டை. (பக்கம் 45 பார்க்க.)

பின்னும் வெல்லும் நாடுகளை சிவாஜியை எடுத்துக்கொள்ளச் சொன்னார். மகாராஷ்டிர ஸாம்பிராஜ்யத்தை ஸ்தாபிக்க எண்ணின சிவாஜி, இவ்விரண்டில் இரண்டாவது நிபந்தனையை மட்டும் நிறைவேற்றினர்.

இதன் பிறகு அவர் ஜஞ்சீரா என்னும் பட்டினத்தைக் கைப்பற்றினர். அது இந்தியாவின் மேற்குக் கடற்கரையிலுள்ள துறைமுகம். அது நன்கு காக்கப்பட்டிருந்தது. சிவாஜியின் சேனை முதலிற் பின்வாங்கினாலும், முடிவில் வெற்றி பெற்றதால், அவர் களிப்படைந்தனர்.

---

7. அப்ஸல்கான் அழிவு.

சிவாஜி பீஜப்பூருக்குச் சொந்தமான பல கோட்டைகளையும் பூமியையும் கொஞ்சம் கொஞ்சமாகக் கைப்பற்றிக்கொண்டு சுவாதீனமாக ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்த எண்ணியுள்ளார் என்பது பீஜப்பூர் சுல்தானுக்குத் தெரிந்தது. அது முதல் அவர் சிவாஜியை எவ்விதத்திலேனும் ஒடுக்கவேண்டுமென்று நினைத்தார்; உடனே மந்திரிகளையும், தந்திரிகளையும் அழைத்து ஆலோசனை செய்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு அபிப்பிராயம் கொடுத்தனர். அப்போது அப்

ஸல்கான் என்னும் ஒரு உத்தியோகஸ்தர் எழுந்து நின்று, தாம் பெரும்படையுடன் சென்று சிவாஜியைச் சிறைப்படுத்திக்கொண்டு வருவதாகச் சபையோர்முன் சபதம் கூறினர் அங்கிருந்த யாவரும் அப்ஸல்கானையே அக் காரியத்துக் கனுப்பத் தீர்மானித்தனர். அப்ஸல் கான் அற்பவீரர் அல்லர்; திடகாத்திரமும், மன மும் வாய்ந்து வாட்போரினும் மற்போரினும் மிக்க சாமர்த்தியம் படைத்தவர். அன்றியும் அவர் பீஜப்பூர் அரசருக்கு நெருங்கிய உறவினர். இப்படிப்பட்ட பல காரணங்களால், சுல்தான் குதிரைப்படையும் காலாட்படையுமாக 12,000 சேனையைச் சேர்த்து அப்ஸல்கான் வசம் அனுப்பினர்.

கான் 1659-ல் மழைகாலத்தில் பீஜப்பூரை விட்டுப் புறப்பட்டார். புறப்படும்பொழுதே அவ ருக்குப்பல அபசகுனங்கள் உண்டாயின என்பர். அவர் முதலில் சிவாஜிக்குச் சொந்தமான துலா புரம் என்னும் கோட்டையை முற்றி, அங்கிருந்த பவானி உருவத்தை அழிக்க நினைத்தார். ஆயி னும், அந்த விக்கிரகம் மறைத்து வைக்கப்பட் டது. அப்ஸல்கான் கோபங்கொண்டு பல அடா தகாரியங்களை அக்கோயிலிற் செய்தனர். இந்துக் களுக்கு மனவருத்தத்தை உண்டுபண்ணும் காரி

யங்களைச் செய்துகொண்டு, படைஎடுத்துக் கான் வரும் விஷயம் சிவாஜிக்கு அறிவிக்கப்பட்டது. உடனே அவர் ராஜகடாவிலிருந்து ஜாவாலியை அடைந்தனர். இதை அறிந்த கான் தமது போக்கை மாற்றிக்கொண்டு பண்டரிபுரம் அடைந்து அங்கிருந்த இந்து ஆலயங்களை யிடித்து அவற்றிலிருந்த விக்கிரகங்களை ஆற்றில் எறியச்சொன்னார்.

இப்படிப்பட்ட பல தகாத காரியங்களைச் செய்துகொண்டு வையநகரை அவர் அடைந்தார்; அங்கே சிவாஜியை அடைப்பதற்காக ஒரு சிறைச்சாலை கட்டுவித்துப் பிறகு சிவாஜிக்கு ஒரு தூதனை அனுப்பினார். எப்படியும் சிவாஜியைப் பங்கப்படுத்திவிடலாம் என்னும் எண்ணம் கான் மனதிற் குடிகொண்டது.

சிவாஜி மிக்க தந்திரமுள்ளவராதலின், பீஜப்பூர் சுல்தான் சூழ்ச்சிகளையும், கானுடைய எண்ணத்தையும் ஊகித்து அறிந்தனர். அவருடைய அந்தரங்கத் தூதன் ஒருவன் பக்கிரி வேடம் பூண்டு அப்ஸல்கான் தங்குமிடஞ் சென்று, அங்கு நடக்கும் இரகசியங்களை யெல்லாம் அறிந்துவந்து அவருக்கு அறிவித்தான். ஆதலால், கானிடம் சிவாஜிக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை. அவருடைய தூதனுக வந்த

கிருஷ்ணாஜி பாஸ்கரன் சிவாஜியைக்கண்டு, அப்ஸல்கான் அவரைக் காணவிரும்பியதாகத் தெரிவித்தான். சிவாஜி அத்தூதனிடம் கான் இந்துக்கோயில்களிற் செய்துவரும் அக்கிரமங்களை எடுத்துக்கூறி, இன்மொழிகளால் அவனை வசப்படுத்திக்கொண்டு கானுடைய உண்மையான எண்ணத்தை வெளியிடுமாறு மரியாதையுடன் கேட்டார். அவருடைய தெய்வ பக்தியையும், தேசபக்தியையும், பிற நற்குணங்களையும் கண்ட அந்தத் தூதன், கான் அவரை நல்ல எண்ணத்தோடு வரவழைக்கவில்லை என்று கூறினன். உடனே அவர் தாம் அங்கு வர முடியாதென்றும் கானைத் தம்மிடம் வரச் சொல்லுமாறும் கூறினர். அன்றியும் கானை அழைத்துவரத் தம்முடைய தூதர்களில் ஒருவனை அவர் அனுப்பினர்.

கிருஷ்ணாஜி பாஸ்கரன் திரும்பிச்சென்று கானைக்கண்டு, சிவாஜிக்கு அச்சம் அதிகமாயிருப்பதால் அவர் வரப் பயப்படுகிறார் என்றும், கானைத் தம்மிடம் அழைத்துவர ஒரு தூதனையனுப்பியிருக்கிறார் என்றும் கூறினன். அப்ஸல்கான் சிவாஜியின் அச்சத்தைப்பற்றி ஆச்சரியப்பட்டு அவரைத் தாமே நேரில் வந்துபார்ப்பதற்காகத் தமது பெருமிதம் தோன்ற அவருடைய

தூதரிடம் சில கூறி அனுப்பினர். கான் தம்மைக் காணவருவதைத் தூதன் மூலம் சிவாஜி அறிந்தனர். கான் ஜாவாலியை நோக்கி வருகிறார் என்பதை உணர்ந்த சிவாஜி, பிரதாபகடா-வைப் பலப்படுத்தினர். அக்கோட்டையைச் சுற்றிக் காடுகளும், பள்ளத்தாக்குகளும் உண்டு. அவற்றுள் பகைவர் சென்றால் வெளிவருவது கஷ்டம். அங்கே சிவாஜி தம் வீரர்களை மறைத்துவைத்துத் தமக்கும் கானுக்கும் ஒருவேளை போர் நிகழ்ந்தால் உடனே வந்து உதவும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டனர். வீரரின் உதவி வேண்டின் அதற்கடையாளம் தாம் எழுப்பும் சங்கநாதமே என்று சிவாஜி கூறியிருந்தனர். பிறகு அவர் தம் தாயையும் பவானி தேவியையும் வணங்கிக் கானைச் சந்திக்கச் சென்றார்.

சிவாஜி கானைக் காண்பதற்குப் பிரதாபகடாவுக்குக் கால் மைல் தூரத்திலுள்ள ஒரு மைதானம் குறிப்பிடப்பட்டது. அங்கே அழகான பந்தல் ஒன்று புதிதாய் நிருமிக்கப்பட்டது. அதனைச் சுற்றிலும் தூரமான இடங்களில் சிவாஜியின் வீரர்கள் ஆயுதபாணிகளாக வைக்கப்பட்டிருந்தனர். கான் பரிவாரத்துடன் பிரதாபகடாவைச் சமீபித்தார். அப்போது கிருஷ்ணஜி பாஸ்கரன் கானைக் கண்டு, 'நீங்கள் பரிவாரத்

துடன் சென்ருல், உங்களைக் கண்டு சிவாஜி பயப்படுவார். நீங்கள் கபட எண்ணத்தோடு செல்வதால், சில மெய்காப்பாளரோடு மட்டும் சென்ருற் போதும்' என்ருன். கான் அதற்கு இணங்கிச் சேனைகளை மலையடிவாரத்தில் இருத்திவிட்டுத் தாம் மட்டும் சிலருடன் மலைமேற் சென்ருர். அவரோடு வாட்போரில் வல்ல சையத்பந்தன் என்பவனும் சென்ருன். சிவாஜி அவனைக்கண்டு பயப்படுவதாய் நடித்து, அவனையும் நிறுத்திவிட்டுவந்தால், தாமும் தம்முடைய மெய்காப்பாளரில் ஒருவனை நிறுத்திவிடுவதாகக் கூறி, ஒரு தூதனைக் கானிடம் அனுப்பினர். சிவாஜியின் அச்சத்தைக்கண்ட கான், முன்னிலும் அதிக ஆச்சரியமடைந்து, அவர் கூறிய காவலனை நிறுத்திவிட்டு, இரண்டே மெய்காப்பாளருடன் சென்று ஏற்படுத்தப்பட்ட பந்தலில் நுழைந்தனர்.

அப்ஸல்கானிடம் ஒரு பட்டாக்கத்திமட்டும் இருந்தது. சிவாஜியிடம் எந்த ஆயுதமும் இருந்ததாக வெளிக்குத் தோற்றவில்லை; ஆயினும் அவர் உடலிலும் தலையிலும் இருப்புக் கவசத்தை அணிந்துகொண்டு, புலிநகம் என்னும் ஆயுதத்தை வெளித்தோன்ருமல் மறைத்து வைத்திருந்தனர். அச்சந்திப்பு மண்டபத்தில்

இருவரும் உட்கார்ந்து சாம்பாஷித்துக்கொண்டிருந்தனர். சம்பாஷணையின் நடுவில் கான் சிவாஜியை அவமரியாதையாகப் பேசினுர். அதனைக் கேட்ட சிவாஜியும் கோபித்துக் கானை மரியாதையின்றிப் பேசினுர். கானுக்கு அடங்காத சினம் உண்டாயிற்று. உடனே அவர் சிவாஜியைப் பிடித்துப் பட்டாக்கத்தியாற் குத்த ஆரம்பித்தனர். ஆயினும் சிவாஜி இருப்புக் கவசம் அணிந்திருந்ததால், அக்கத்திவெட்டால் அவருக்குக் கேடு உண்டாகவில்லை. இந்தக் காரியம் சிவாஜி எதிர்பாராதபடி நடந்ததால், அவர் சிறிது திகைத்தனர்.

ஒருவர்க்கு உயிரினும் உயர்ந்தது உலகில் உண்டோ? கான் மறுபடியும் தம்மை வெட்டுவதற்குள் அவர் வீராவேசம் அடைந்து கானுடைய இடுப்பை இரண்டு கைகளாலும் திடீரென்று தழுவிக்கொண்டு, கைகளில் மறைத்து வைத்திருந்த புலிநகம் என்னும் ஆயுதத்தால் அவருடைய வயிற்றைக் கீறிக் கிழித்துவிட்டார். அது நடக்கும்போது கான் சிவாஜியின் தலையைக் கத்தியால் வெட்டினுர். இருப்புத் தகட்டை உள்ளிட்ட தலைப்பாகையைச் சிவாஜி அணிந்திருந்ததால், அவருக்கு ஒரு தீங்கும் நேரிடவில்லை. இதற்குள் அவர் தம் மெய்காப்பாளரிட

மிருந்து பட்டாக்கத்தியைப்பெற்றுக் கானுடைய கரங்களைச் சேதித்தனர். கானுடைய வீரர்கள் ஓடிவந்து அவரைப் பல்லக்கில் வைத்துத் தூக்கிச் சென்றூர்கள். சிவாஜியின் வீரர்கள் போகிகளையும், கானையும் வெட்டி வீழ்த்தினர். இவ்வளவு காரியமும் வெகு விரைவில் நடந்ததாகத் தெரிகிறது.

சிவாஜி சங்கேதப்படி சங்கநாதம் செய்தனர். மூலை முடுக்குகளிலும், பள்ளத்தாக்குகளிலும், புதர்களிலும் பதுங்கியிருந்த அவருடைய வீரர்கள் திடீரென்று வெளிப்பட்டுக் கானுடைய படைகள் எதிர்பாராத வேளையில் எதிர்த்துப் பொருதார்கள். தலைவனை இழந்த அச்சேனை சிறிது நேரத்தில் சின்னபின்னமடைந்து ஓடத் தலைப்பட்டது. அச்சேனை வசமிருந்த 4000 குதிரைகளையும், மற்ற எல்லாப் பொருள்களையும் சிவாஜி கைப்பற்றிக்கொண்டார். கிடைத்த பொருள்களிற் சிலவற்றை அவர் வீரர்களுக்கும், தருமத்துக்கும் பங்கிட்டுக் கொடுத்தனர். பின்பு அவர் கானைப் பிரதாபகடாவிற்குச் சமீபத்தில் அடக்கம் செய்து ஒரு கோரியையும் அங்குக் கட்டினர். இதை வேறுவிதமாகக் கூறுவாறும் உளர்.

அப்ஸல்கான் இறந்த விஷயம் பீஜப்பூர் சுல்தானுக்கு எட்டியது. அவரும் அவரன்னை

யும் நெருப்பில் விழுந்த புழுப்போலத் துடித்துத் துயரக்கடலில் ஆழ்ந்தனர். பீஜப்பூர் படைத்தலைவரிற் சிலர் சிவாஜியோடு சேர்ந்து கொண்டனர். அதனால் சிவாஜிக்குச் சேனைப் பெருக்கம் உண்டாயிற்று. பின்பு அவரை எப்படியாவது தொலைக்கவேண்டுமென்று சுல்தானே பெருஞ்சேனையோடு போர்க்கு எழுந்தனர்; தாம் இழந்த சில கோட்டைகளை அவர் கைப்பற்றினர். அங்ஙனம் இரண்டு வருஷகாலம் போர்கள் நடந்தன. சுல்தான் சில வெற்றிகளைப் பெற்றும், சிவாஜியின் வல்லமையே பெரிதாகக் காணப்பட்டது.

---

8. தந்தையைச் சந்தித்தல்.

ஷாஜியைச் சிறையிடுதற்குக் காரணனாயிருந்த பாஜிகோரபடேயை வருத்தவேண்டுமென்ற எண்ணம் சிவாஜியின் மனத்தைவிட்டு அகலவே இல்லை. 1662-ல் முத்தோல் என்னும் இடத்திற் சிறு சேனையுடன் பாஜிகோரபடே சென்றிருப்பதை அறிந்த சிவாஜி, திடீரென்று ஒரு பெருஞ் சேனையுடன் அங்குச் சென்று அவ்வூரை அக்கினிக்கு ஆகாரமாக்கினர். கோரபடேயையும் அவன் குடும்பத்தின் ஒவ்வொருவரையும் நிர்மூலமாக்கிவிட்டுத் திரும்பினர். இதன் பிறகு

சிவாஜி தம் வெற்றியையும் களிப்பையும் ஷாஜிக்குக் கடித மூலம் அறிவித்தனர்.

இதற்குள் சிவாஜி பீஜப்பூர், கோல்கொண்டா மன்னருடன் சமாதானம் செய்துகொள்ள விரும்பினர். அம்மன்னரும் அதனையே நாடியிருந்தனர். இச்சமாதான உடன்படிக்கையை நிறைவேற்ற ஷாஜியே தூதராக நியமிக்கப்பட்டனர். அவர் தமது இளையாளையும், அவள் புத்திரன் வெங்காஜியையும் அழைத்துக்கொண்டு புனா நகரைநோக்கிப் புறப்பட்டனர்; செல்லும் நெறியில் துலாபுரத்துப் பவானியையும், பண்டரிபுரத்து விட்டல நாதரையும் தரிசித்துக்கொண்டு போயினர்.

தந்தையின் வருகையை உணர்ந்த சிவாஜி அவரைத் தமது அன்னையுடனும் இரு மனைவியருடனும் எதிர்கொண்டு சென்று சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்து, அவரைப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டு பன்னிரண்டு மைல் தூரம் கால் நடையாய் ஜேஜூரி நகரத்துக் கழைத்துச் சென்றார். பிறகு சிவாஜியின் வேண்டுகோளின் படி ஷாஜி அங்கு ஒரு கட்டிடத்தில் இறங்கினர். ஷாஜி ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தார். சிவாஜி நின்றவண்ணமா யிருந்தனர். அப்போது ஷாஜி சிவாஜியை உட்காரச் சொன்னார். அவர் உட்

கார்ந்து பிதாவின் பாதங்களை வணங்கி, 'என் னையனே! முதலில் தாங்கள் கூறிய வார்த்தை யைத் தள்ளித் தங்களைச் சிறைக்கூடத்தில் சேர்ப் பதற்குக் காரணமாயிருந்த என் குற்றத்தைப் பொறுத்தருளுமாறு பன்முறை வேண்டுகிறேன்' என்றனர்.

தனயரது விநயத்தையும், கழிவிரக்கத்தை யும், உருக்கமான மொழிகளையும் உணர்ந்த ஷாஜி, அவரை மார்போடு தழுவிக்கொண்டனர். அவ ருக்கு இன்பக் கண்ணீர் மல்கியது. அவர் தம் புதல்வரைப் பார்த்து, 'என்னப்பனே! உன் பிழையைப் பொறுத்தேன்' என்று கூறினர். அப் பால் அவரும் சிவாஜியும் புனு நகரை அடைந் தனர். அங்கே 1662-ல் ஒரு உடன்படிக்கை நடந் தது. அதன்படி வடக்கே கல்யாணபுரம், கிழக்கே இந்தாபுரம், தெற்கே பொண்டா, மேற்கே டாபல் என்ற நான்கு எல்லைகட்கும் உட்பட்ட பாகம் சிவாஜிக்குச் சொந்தமாயிற்று. ஷாஜி உயிருடன் இருக்கும்வரை பீஜப்பூரை எதிர்ப்பதில்லை யென்று சிவாஜி உறுதி கூறினர். பிற பகைவர் எதிர்க்கும்போது இவ்விருவரும் ஒருவர்க்கொரு வர் உதவி செய்யவேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வுடன்படிக்கை முடிந்ததும் சிவாஜி தமது முக்கியமான கோட்டைகளை ஷாஜிக்குக் காண்பித்தார். அப்போது ஷாஜி ரைரிக்கோட்டையைக் கண்டபோது, அது உயர்ந்த பாதுகாப்பு இடமென்றும், அதைப் பலப்படுத்தவேண்டுமென்றும் கூறிச்சென்றார்.

சிவாஜி அதனை அப்படியே பலப்படுத்தி அதற்கு ராஜகடா என்ற பெயர் இட்டனர். அதன் பலத்தைப் பரீக்ஷிக்க எண்ணிய சிவாஜி ஒரு விளம்பரம் செய்தனர். அதாவது, எவனொருவன் வழக்கமான பாதையாலன்றி வேறு பாதையால் அக்கோட்டைக்குள் வருகிறானோ, அவனுக்குப் பொற்காசு அடங்கிய ஒரு பை பரிசளிக்கப்படும் என்பதாம். ஒருவரும் அக்காரியம் செய்ய முன்வரவில்லை. முடிவில் மாகர் குலத்தான் ஒருவன், குறித்தபடி அக்கோட்டையில் ஏற முடியுமென்றும், அங்ஙனம் செய்தால், தன் கொடியை அதன்மேல் நாட்ட உத்தரவளிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டான். சிவாஜியும் அதற்கிணங்கினர். அவன் ஒருநாள் முழுதும் முயன்று வெகு களைப்போடு அக்கோட்டைமேலேறி, அங்குத் தன் கொடியைக் கட்டினான். சிவாஜி இச் செய்தியை அறிந்து பொற்காசுகளைத் தாம் கூறியபடியே அன்புடன்

அவனுக்கு அளித்தனர். அவன் ஏறின வழிக்கு *சோர்தர்வாஜா என்ற பெயர் கொடுக்கப்பட்டது. பிறகு அவன் ஏறின வழியைச் சிவாஜி நன்றாக அடைத்து ஒருவரும் ஏறமுடியாதபடி வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். இதுவே சிவாஜியின் கோட்டைகளில் மிக்க பாதுகாப்புள்ளது. ஆதலின் அவர் இதனைத் தமது தாயின் வாசஸ்தலம் ஆக்கினர்.

---

9. சிவாஜியும், ஷேயிஸ்டகானும்.

மொகலாயர்கள் தக்கணத்திற்கு அடிக்கடி வந்து தலையிடுவது சிவாஜியின் நோக்கத்துக்கு மாறாக இருந்தது. அதாவது, அவர் மகாராஷ்டிர இராஜ்யத்தை ஏற்படுத்துவதற்குப் பெருந் தடையாக இருந்ததாம். ஆதலால் அவர்களால் உண்டாகும் இடையூறுகளைத் தடுப்பதற்காக, அவர் தகுந்த வழிகளைத் தேடினர். உடனே அவர் பெரும்படையைச்சேர்த்தனர். முன்1661-ல் மொகலாயர்கள் சிவாஜிக்குச் சொந்தமான கல்யாண பட்டணத்தைக் கைப்பற்றியிருந்தார்கள். அதனை அவர் நன்கு அறிந்திருந்தும், ஆங்காலம் நோக்கிச் சும்மா இருந்தனர். தமது படை பலப்பட்டதும், அதைக் கைப்பற்றும்படி ஒரு சேனையை

---

* கள்ள வழி.

அவர் அனுப்பினர்; அப்பொழுதே தக்கணத்திலுள்ள மொகலாயரைச் சேர்ந்த நாடுகளைச் சூறையாடும்படி மோரேபிங்களே என்பவரைப் பெருஞ் சேனையோடு அனுப்பினர்.

தக்கணத்திலுள்ள மொகலாய நாட்டிற்கு ஷெயிஸ்டகான் என்பவர் சுபேதாராக இருந்தனர். அக்காலத்தில் மொகலாயருக்குச் சேர வேண்டிய பணத்தைச் சேர்த்து ஒளரங்கபாத் என்ற நகருக்கு அனுப்புவது வழக்கம். ஷெயிஸ்டகான் சுபேதார் ஆகுமுன் இரண்டொருவருஷமாக இந்தப் பணம் காசறைக்கு அனுப்பப்படவில்லை. இதற்குக் காரணம் என்னவென்று ஷெயிஸ்டகான் விசாரித்தனர். பணத்தை அனுப்பினால் வழியில் சிவாஜியைச் சேர்ந்தவர்கள் பறித்துக்கொள்வார்கள் என்ற பயத்தாற் பணம் அனுப்பப்படாமல் இருந்ததென்று ஆங்கிருந்தோர் அறிவித்தனர். அதனைக் கேட்ட ஷெயிஸ்டகான் கைதட்டிச்சிரித்து, 'நீங்கள் ஆண் பிள்ளைகளா? இதோ ஒரு ஸ்திரீயை அனுப்பி அந்தப் பணத்தைத் தலைநகருக்குக் கொண்டுவரச் செய்கிறேன், பாருங்கள்' என்று கூறிச் சில வீரர்களுடன் தைரியமுள்ள ஒரு ஸ்திரீயை அனுப்பினர்.

அப்பெண் பணவசூல்செய்ய வேண்டிய இடங்களுக்குச் சென்று, வசூலித்த பணத்தைத் தலைநகருக்குக் கொண்டு சென்றனள். இந்த விஷயம் சிவாஜிக்குத் தெரிந்தது. அவர் ஒரு சிறு படையை அனுப்பினர். அப்படை சென்று, ஔரங்கபாத்துக்குக் கொண்டுபோகப்பெறும் பொருள் முழுவதையும் கைப்பற்றிக்கொண்டு, காவலாகச் சென்ற மாதையும் சிறைப்படுத்தியது. இவ்விஷயத்தை ஷெயிஸ்டகான் கேள்விப்பட்டுச் சிவாஜியைத் தண்டிப்பதற்கு ஒரு தண்டை அனுப்பினர். அதனை அவர் எதிர்த்து ஓட ஓட அடித்தனர். பிறகு தக்கணத்திலுள்ள மொகலாய நாடுகளில் அவர் தமது வெற்றியை நிலைநாட்டி வரி வசூலிக்க ஆரம்பித்தனர்.

இந்த விஷயம் டில்லியிலிருந்த ஔரங்கசீப் காதிற்கு எட்டியது. உடனே அவர் கடுஞ்சினங் கொண்டு ஒரு பெரிய படையைத் திரட்டி, அதனை ஷெயிஸ்டகான் வசம் அனுப்பிச் சிவாஜியைத் தொலைத்துவிடும்படி கண்டிப்பான கட்டளை கொடுத்தார். ஷெயிஸ்டகான் பாதுஷாவின் தாயொடு பிறந்த மாமனர்; அன்றியும் அவருடைய பாட்டிக்கு நெருங்கிய உறவினர்; மேலும் ஒரு பெரிய போர்வீரர். அவரும் சிவாஜியை அடியோடு ஒழித்துவிடும் உறுதியுடன்

புறப்பட்டனர். முதலில் நடந்த போரில் சிவாஜி தோல்வியடைந்து ராஜகடாவுக்குச் சென்றனர். மொகலாயரின் சேனைத்தலைவர் புனாவையும் சுபாவையும் கைப்பற்றினர். அதன்பின்னர் நடந்த போர்களிலும், மொகலாயருக்கே நன்மையுண்டாயிற்று என்னலாம். முடிவில் ஷெயிஸ்டகான் மனக்களிப்போடு புனாவையடைந்து, அங்கே சிவாஜிக்கு உரிய ஒரு அரண்மனையில் தங்கினர். சிவாஜி தம்மை எதிர்க்கக்கூடுமென்றெண்ணிய ஷெயிஸ்டகான் ஒரு ஏற்பாடு செய்தனர். புனா நகரத்துக்குள் வருபவர் யாராயிருந்தாலும் அனுமதிச் சீட்டின்றி உட் பிரவேசிக்கக் கூடாதென்றும், மகாராஷ்டிரக் குதிரைவீரரை எக்காரணத்தாலும் உட்செல்ல விடலாகாதென்றும், அவ்வூரைச்சுற்றி மொகலாய வீரரை நிறுத்திக் காவல் காக்கவேண்டுமென்றும் நியமித்தனர். அவ்வாறே மொகலாய வீரர்கள் மிக்க கவனத்தோடும் சுறுசுறுப்போடும் காவல்புரிந்து வந்தனர்.

ஷெயிஸ்டகான் பலமான பாதுகாப்புடன் இருந்ததால், தந்திரத்தாலன்றிப் புனா நகருக்குள் செல்லமுடியாதென்று சிவாஜி நன்கு அறிந்தனர். நகருக்குள் அனுமதிச் சீட்டின்றிச் செல்லவோ முடியாது. அதற்கு அவர் ஒரு சூழ்ச்சி கண்டனர். அவர் கூறியபடி இருநூறு

மகாராஷ்டிரப் படைவீரர் மொகலாயரைப்போல் உடைதரித்துக்கொண்டு அந்த நகரில் ஒரு கல்யாணம் நடத்தப் போகவேண்டுமென்று அனுமதிச் சீட்டைப் பெற்றுக்கொண்டு உட்சென்று ஊர்வலம் போகிறவர்களைப்போல வரிசை வரிசையாகச் சென்றார்கள். அவர்கள் ஒரு சிறுவனை மாப்பிள்ளை போலவும், மற்றொருவனை மணப்பெண் போலவும் அலங்கரித்து மேளதாளத்தோடு முன் விடுத்தனர்.

சிவாஜியின் வீரர்களிற் பின்னும் சிலர் மொகலாயரைப்போல உடைதரித்துக்கொண்டு, தங்களைச்சேர்ந்த வேறு சிலரைப்பிடித்து மொகலாயக் காவலர்க்கு முன் அடித்து அவர்களைத் தங்கள் தலைவனிடம் கொண்டுபோவதாகப் பாவனை காட்டி, அனுமதிச் சீட்டைப் பெற்றுக்கொண்டு, வேறொரு வாயில் வழியே நகருட்சென்று, முன் சென்றவர்களுடன் சேர்ந்துகொண்டனர். ஷெயிஸ்டகான் இருந்த அரண்மனைவாயிலிற் பல விளக்குகள் எரிந்துகொண்டிருந்ததால், சிவாஜியும் அவரைச்சார்ந்த சிலரும் பின் பக்கத்தில் இருந்த சமையல் அறையின் வழியாக உட்செல்வதே சரியென்று தீர்மானித்தனர்.

அங்ஙனமே அவர்கள் சமையல் அறையினுள் நுழைந்து அங்கிருந்தவர்களை வாளுக்கு

இரையாக்கிவிட்டுப் பிறகு ஷெயிஸ்டகான் இருந்த அறைக்குட் பிரவேசிக்க முயன்றூர்கள். அந்த அறை நன்கு தாழிடப்பட்டிருந்ததால், சுவரைத் துளைத்துக்கொண்டு உட்செல்ல மகாராஷ்டிரர் நிச்சயித்தனர். அங்ஙனமே செய்கையில் அவ்வரவம் உள்ளிருந்த ஷெயிஸ்டகானுடைய சேடிக்குக் கேட்டது. அவள் அவ்விஷயத்தை ஷெயிஸ்டகானுக்குத் தெரிவித்தனள். அவர் குடிவெறியால் மதிமயங்கிக் கிடந்ததால், அவள் கூறியதைக் கவனிக்க முடியவில்லை. பிறகு சிவாஜியும் அவரைச் சேர்ந்த சிலரும் உள்ளே நுழைந்து கான் விரல்களில் மூன்றைச் சேதித்தார்கள். அதனுல் ஷெயிஸ்டகான் மயக்கப்பட்டுக் கீழே விழுந்தனர். இருட்டாயிருந்ததால், அவர் இறந்தாரென்று எண்ணிய மகாராஷ்டிர வீரர் அவர் மகன் படுக்கையறையுள் நுழைந்தனர். அவர் மகனும் சில மூகமதிய வீரரும் சிவாஜியின் வீரர்களை எதிர்த்தனர். அக் குழப்பத்தில் கான் மகன் வான் அடைந்தான். ஷெயிஸ்டகான் ஒரு சாளரத்தின் வழியே வெளிச்சென்று ஓடி உயிர் தப்பினுர்.

சேனுதிபதியின் விரல்கள் பகைவரால் நறுக்குண்டதும், அவர் ஓடி உயிர்தப்பியதும் தெரிந்தவுடன், மொகலாய சேனையில் எங்கும் பீதியும்

குழப்பமும் மிகுந்திருந்தன. அந்நிலைமையே சிவாஜியும் அவரைச் சேர்ந்தோரும் தப்பிச் செல்வதற்கு ஏற்றதாயிருந்தது. ஆதலின் மகாராஷ்டிர வீரரெல்லாரும் பத்திரமாக அவ்விடம் விட்டு நீங்கி நகருக்கு வெளியே பலவிடங்களிலும் மறைந்திருந்த தங்கள் துணைவரையும் கூட்டிக்கொண்டு சிம்மகடாவை நோக்கிப் பறந்து சென்றனர்.

மொகலாய சேனையில் ஏற்பட்ட பீதியும் குழப்பமும் ஒருவாறு தெளிந்தபின், அதன் ஓர் பகுதி பகைவரைத் துரத்திப்பிடிக்கப் புறப்பட்டு வேகமாய்ச் சென்றது. ஆனால் சிவாஜி அதை முன்னமே எதிர்பார்த்துத் தக்க உபாயம் ஒன்று செய்திருந்தார். புனா நகரத்திற்குச் சிறிது தூரத்தில் சோலை ஒன்றிருந்தது. அதிலிருந்த மரங்களில் அவர் பல தீவர்த்திகளைக் கட்டுவித்து, மொகலாய சேனை மகாராஷ்டிர வீரரைத் துரத்திப்பிடிக்கப் புறப்பட்டதும் குறிப்புக் காட்டுவதாகவும், அச்சமயம் அத்தீவர்த்திகளெல்லாவற்றையும் கொளுத்திவிட வேண்டுமென்றும் நம்பிக்கையான சிலரிடம் சொல்லித் திட்டம் செய்திருந்தார். அவ்வாறே யாவும் நடந்தன.

மொகலாய சேனை துரத்திப் புறப்பட்டதும், குறித்த அடையாளப்படி அதை அறிந்து

சோலையிலிருந்தோர் தீவர்த்திகளைக் கொளுத்தி மாடுகளை யெல்லாம் அவிழ்த்து விட்டனர். அவைகளெல்லாம் ஓடத்தலைப்பட்டன. இரவில் எதிரிகள் தப்பியோடுவதுபோல் அது இருந்ததால், மொகலாய வீரர்கள் அத்திசை நோக்கித் தவருகச் சென்றனர். ஆனால் சிவாஜியும் அவர் வீரரும் வேறொரு திசையில் இரவில் விரைந்து சென்று சுகமாகச் சிம்மகடாக் கோட்டையை அடைந்தனர்.

கான் தோல்வியடைந்து மதிமயங்கிப் புனாவை நோக்கித் திரும்பி வருகையில், ஒரு மகாராஷ்டிர சேனை அவரை வழிமறித்து முறியடித்தது. இவ்விஷயம் ஔரங்கசீபுக்கும் எட்டியது. புனாவையடைந்த ஷெயிஸ்டகான் அங்குச் சின்னாள் இருந்துவிட்டுப் பின் ஔரங்கபாத்துக்குச் சென்றுவிட்டனர்.

---

10. சூரத்நகரைச் சூறையிடல்.

இதுவரை மலைப்பிரதேசங்களில் தமது வெற்றியை நிலைநாட்டிய சிவாஜி, இதன் பிறகு அவைகளுக் கப்பாலுள்ள இடங்களையும் கைப்பற்றத் துணிந்தனர். புனாவிலிருந்து 150 மைல் வடக்கிலுள்ள சூரத் நகரமானது வியாபாரத்திலும், செல்வத்திலும் சிறப்படைந்திருப்பதை

அவர் கேள்வியுற்றிருந்தனர். அன்றியும் அரேபியாவிலும் பாரசீகத்திலுமிருந்து ஆண்டுதோறும் அங்குவந்து இறங்கிய தங்கமும் வெள்ளியும் 50 லக்ஷம் ரூபா விலையுள்ளன. அந்த நகரிலுள்ள இரண்டு குடும்பத்தார் நாட்டில் பெரிய வியாபாரிகளா யிருந்தனர். மேலும் அந்த நகரம் மொகலாய நாட்டின் முக்கிய துறைமுகமாயும் இருந்தது. ஆதலால் முகமதிய பக்திமான்களும் உத்தியோகஸ்தர்களும் அங்கிருந்து மெக்காவுக்குக் கப்பல் ஏறுவது உண்டு. அதனுலும் அங்கு ஏராளமான வரும்படி பாதுஷாவுக்குக் கிடைத்தது.

சிவாஜி உருமாறி அந்நகருட்சென்று ஆங்கு நான்கு தினங்கள் தங்கியிருந்து, தாம் சூறையிடப்போகும் வீடுகளைக் குறித்துக்கொண்டு ஊருக்குத் திரும்பிவிட்டனர். பிறகு நாலாயிரம் குதிரைப்படையுடன் அந்த நகருட்சென்று ஆறு நாட் சூறையாடி ஏராளமான பொருளைக் கைப்பற்றினர்.

ஐரோப்பிய வியாபாரிகளேயன்றி அவரை வேறு எவரும் எதிர்க்கத் துணியவில்லை. ஸர். ஜார்ஜ் ஆக்ஸன்டன் என்ற ஆங்கில வியாபாரத் தலைவர், தம் கூட்டத்தாரின் பொருள்களைப் பாதுகாத்துக்கொண்டார். அவரது தைரியத்

தைக்கண்ட ஔரங்கசீப் மற்ற வியாபாரிகளுக்கில்லாத சில உரிமைகளை ஆங்கிலேயருக்கு அளித்தனர். இது நிற்க.

இச்சூறை முடிந்தவுடன் சிவாஜி ராஜகிரிக் கோட்டையை அடைந்தனர். அச்சமயம் அவருடைய பிதாவான ஷாஜி, எழுபத்திரண்டாவது வயதில் இறந்ததாகக் கேள்விப்பட்டுச் சரமகிரியைகளை நிறைவேற்றினர். ஷாஜி இருந்தபோது, பெங்களூரைச் சேர்ந்த பிரதேசமும், ஆரணி, போர்டோ நோவோ, தஞ்சை முதலிய பிரதேசங்களும் அவர் கைவசம் இருந்தன.

பிதுர்க்கடனை முடித்தவுடன் சிவாஜி, ராஜா என்னும் பட்டத்தை வகித்துக்கொண்டு தமது பெயரால் நாணயங்களை அச்சிட்டு வெளியேற்றினர். அப்பால் ஒரு கப்பற்படையைச் சித்தம் செய்தாலன்றி, தரையிற்போலவே கடலிலும் தமது வல்லமையைச் செலுத்தமுடியாதென்று எண்ணிய அவர், சிலகாலம் அவ்விஷயத்தில் கவனம் செலுத்துவார் ஆயினர். அவருடைய காலாட்படை மொகலாய இராஜ்யத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு, ஆமத் நகரம்வரை சென்றது. அவருடைய கப்பற்படையோ மெக்காவுக்குச்செல்லும் மரக்கலங்களை எதிர்த்துத்தாக்கி, அவற்றிற் பிரயாணம் செய்யும் செல்வரிட

மிருந்து ஏராளமான பொருளைக் கைப்பற்றினது. 1605-ஆம் வருஷம் அவருடைய கப்பற்படை 80 மரக்கலங்களைக் கொண்டிருந்தது. அதே வருஷம் பெப்ருவரிமாதம் அவர் 4000 வீரர் அடங்கிய கடற்படையுடன் பார்ஸிலோர் என்னும் பட்டணத்திற் சென்று இறங்கினர். அது கோவாவுக்குத் தெற்கே 130 மைல் தூரத்தில் மேற்குக்கடல் ஓரத்தில் இருந்தது. இக்காலத்தில் அது அழிந்துபோனாலும், அக்காலத்தில் பெரிய துறைமுகமாயும் வர்த்தக நகராயும் இருந்தது. அங்கிறங்கிய சிவாஜி ஏராளமான பொருள்களைத் திரட்டிக் கைப்பற்றிக்கொண்டு, அங்குள்ள எவரும் அறியுமுன் கப்பலேறிச் சென்று தமது தலைநகரைச் சேர்ந்தனர். இதுவே அவர் செய்த முதலுங் கடைசியுமான கப்பற் போர். அவர் தமது ஊர் திரும்பியதும், வியாதியாற் சிலகாலம் பீடிக்கப்பட்டு வருந்தினர்.

---

11. பாதுஷாவுடன் செய்த போரும், சமாதானமும்

முன் நடந்த எல்லா விஷயங்களும் ஒளரங்கசீபுக்குத் தெரிந்தன. அவர் மதப்பற்று மிகுதியுமுடைய ஒரு முகமதியர் அல்லரோ? ஆதலால் சிவாஜி வகித்துக்கொண்ட அரசப்பட்டத்தைக் கேள்வியுற்று அடைந்த கோபத்திலும், மெக்கா

வுக்குச்சென்ற கப்பற் பிரயாணிகளுக்கு அவர் இழைத்த இடையூறுகளைக்கேட்டு மிக்க கோபம் கொண்டனர். உடனே அவர் ஒரு பெரிய படையைக் கூட்டி, அதற்கு ராஜா ஜயஸிங் என்பவரையும், டெலீர்கான் என்பவரையும் தலைவராக ஏற்படுத்திச் சிவாஜியை உடனே ஒடுக்கிவருமாறு கட்டளையிட்டனர். அவ்விருவரும் கடல்போற் பரந்த பெருஞ் சேனையோடு சிவாஜியின் நாட்டிற் புகுந்து பெருங் குழப்பங்களை உண்டாக்கினர். சிவாஜி கடற்போரை முடித்துக்கொண்டு திரும்பி வந்து பிணிவாயில் அகப்பட்ட சமயம் இது. மொகலாய சேனைகள் சிவாஜியின் கோட்டைகளை முற்றுகையிட்டன. இவ்விஷயம் சிவாஜிக்குத் தெரிந்தது.

மொகலாயப் படையை எதிர்த்து வெற்றி கொள்ளும் ஆற்றல் அச்சமயம் தமக்கு இல்லை என்பது சிவாஜிக்கு நன்கு புலனாயிற்று. உடனே அவர் ஒரு ஆலோசனைச் சபையைக் கூட்டினர். 'விரோதியோடு சமாதானம் செய்துகொள்வதே சாலச் சிறந்தது' என்று முடிவுசெய்துகொண்டனர். அக்கணமே அவர் ஒரு தூதனை ஜயஸிங்கிடம் அனுப்பித் தாம் போரை விரும்பவில்லையென்றும், சமாதானத்தையே விரும்புவதாகவும் தெரிவித்தனர். ஜயஸிங் முதலில் சிவாஜி செய

விற் சூதிருப்பதாக எண்ணி இணங்கவில்லை. ஏனெனில், முன் அப்ஸல்கானும் ஷெயிஸ்டகானும் அடைந்த கதி தமக்கும் நேரிடுமோ என்று பயந்தார். ஆயினும் சிவாஜியனுப்பிய தூதன், அவர் உண்மையாகவே சமாதானம் செய்து கொள்ள விருப்புவதாக அறிவித்தான். ஜயஸிங் முடிவில் அதற்கு இணங்கினர்.

மறுநாள் சிவாஜி ஜயசிங்கைக் காணச்சென்றனர். ஜயஸிங் அவரை எதிர்கொண்டழைத்துச்சென்று, உட்காரச்சொல்லித் தாமும் வீற்றிருந்தனர். இருவரும் நெடுநேரம் பேசிய பிறகு, சிவாஜி தமது எண்ணத்தை அவருக்கு வெளியிட்டனர். ஜயஸிங்கும் சமாதானத்தை விரும்பி, சிவாஜி டில்லி பாதுஷாவின் ஆட்சிக்குட்பட்டு நடக்கவேண்டுமென்றும், அப்படி நடந்துகொண்டால், அவரை ஒரு ஜாகீர்தாராகச் சக்கரவர்த்தி ஒப்புக்கொள்ளும்படி தாம் செய்ய முடியுமென்றும் கூறினர். சிவாஜியும் அதற்கு ஒப்பினர். அப்பால் அவ்விஷயத்தை ஜயஸிங் டெலீர்கானுக்குச் சொல்லியனுப்பிப் போரை நிறுத்திவிடுமாறு கூறினர். அவரும் போரை நிறுத்திவிட்டுச் சிவாஜிக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில் டில்லியிலிருந்து நீண்ட தூரம் பிரயாணம் செய்து மகாராஷ்டிர நாடடைந்து போர்புரிவதற்கு மொகலாயர் வந்திருப்பதால்

சமாதானம் நாடுவது தருமம் அன்று என்றும், மகாவீரரான மகாராஷ்டிரரோடு போர்புரிவதே தம் அபேட்சையென்றும் அவர் கண்டிருந்தார். ஆயினும் சிவாஜி சமாதானமே விரும்பினர். ஆதலின், புரந்தரன்கோட்டையில் ஓர் உடன்படிக்கை செய்யப்பட்டது.

அதன் நிபந்தனைகளாவன—சிவாஜி வென்ற மொகலாய நாடுகளில் மூன்றரை லக்ஷம் ரூபா வரி வசூலாகும் பன்னிரண்டு கோட்டைகளைத் தவிர, மீதிப்பாகத்தைப் பாதுஷாவுக்குச் சிவாஜி கொடுத்துவிடவேண்டும் என்பதும், பாதுஷாவுக்கு விரோதமாகச் சிவாஜி போர்புரியக்கூடாது என்பதும், தக்ஷணத்தில் மொகலாயர் சேனையில் ஐயாயிரம் வீரருக்கு அவர் தலைவராக இருந்து, தக்ஷண சுபேதாருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்பதும், பீஜப்பூர் பிரதேசங்களிற் * சௌத் என்ற வரியும், ‡ சர்தேசமுகி என்ற வரியும் சிவாஜி வாங்கிக்கொள்ளலாம் என்பதுமாம்.

இவற்றுள் கடைசியாகக்கண்ட நிபந்தனைகள் சிவாஜியால் தந்திரமாகச் சேர்க்கப்பட்டன. இவற்றால் மிகுந்த வருமானம் கிடைக்குமானதால், அவர் இப்படிச்செய்தனர். உடன்படிக்கை

* சௌத்—நிலவரியில் நான்கில் ஒரு பாகம்.

‡ சர்தேசமுகி—நிலவரியில் பத்தில் ஒரு பாகம்.

முடிந்தவுடன் ஜயஸிங் அதை ஔரங்கசீபுக்கு அறிவித்தனர். அவர் அந்த நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு சிவாஜிக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில், அதுகாறும் சிவாஜி செய்த குற்றங்களைத் தாம் மன்னிப்பதாயும், அதுமுதல் ராஜபக்தியுடன் அவர் நடந்துகொள்ளவேண்டுமென்றும் கண்டிருந்தது. அவரும் தாம் அவ்வாறே நடந்துகொள்வதாக இசைந்து, வணக்கமான மறுமொழிக் கடிதம் ஒன்று தீட்டிப் பாதுஷாவுக்கு அனுப்பினர்.

---

12. சிவாஜியும் ஔரங்கசீபும்.

ஷாஜி முன் ஏற்படுத்திய சமாதானம் நெடுநாள் நீடித்திருக்கவில்லை. சிவாஜி பாதுஷாவின் வேலையில் சேர்ந்தவுடனே, தமது இரண்டாயிரம் குதிரைப் படையையும் எண்ணாயிரம் காலாட் படையையும் திரட்டிக்கொண்டு மொகலாய சேனையுடன் சேர்ந்து வந்து பீஜப்பூரை எதிர்த்தார். பீஜப்பூர் சமஸ்தானத்தின் குதிரைப்படைக்குச் சிவாஜியின் மாற்றாந்தாயின் மகனை வெங்காஜி தலைமை பெற்றிருந்தார். இரு திறத்தாருக்கும் கோரமான போர் நடந்தது. சிவாஜி இரண்டு ஊர்களைத் தம் வசமாக்கிக் கொண்டார். விஷயங்களைத் தூதர் மூலமாய்

அறிந்த ஔரங்கசீப் அவரை மெச்சி, இரத்தினக்கற்கள் இழைத்த ஒரு பட்டாக்கத்தியை அவருக்கு அனுப்பினர். சில நாட்களில் டில்லிக்கு வந்து தம்மைக் காணும்படி பாதுஷா அச்சமயம் சிவாஜிக்கு ஒரு நிருபம் போக்கினுர்; அன்றியும் அவருக்கு ராஜா என்ற பட்டமும் அளித்தனர்.

ஔரங்கசீப் தம்மை அன்புடன் நடத்துவாரென்று சிவாஜி நினைத்துத் தம் தாய், மனைவியர், ஆசிரியர், உற்ருேர் முதலிய யாவரிடமும் டில்லிக்குச் செல்ல விடைபெற்றனர். பின்பு அவர் தம் நாட்டைத் தக்கவரிடம் ஒப்புவித்துவிட்டுச் சாம்பாஜியையும், தமக்கு அந்தரங்கமான ஐந்து மகாராஷ்டிர வீரர்களையும் ஆயிரத்தைந்நூறு காலாட்படை வீரரையும் உடன்கொண்டு சென்ருர். அப்போது பீஜப்பூருக்கு அருகில் ஜயஸிங் இருந்தார். சிவாஜி அவரைச் சந்தித்துத் தாம் பாதுஷாவைப் பார்க்கப்போவதாகக் கூறலும், அவர் அது தக்கதே எனக் கூறித் தமது மகனை ராம்ஸிங் என்பவனை வழித்துணையாகக் கூட்டி அனுப்பினுர்.

சிவாஜியும், ராம்ஸிங்கும் நெடுநாளாகச் சம்பாஷித்துக்கொண்டே சென்றனர். ராம்ஸிங்குக்குச் சிவாஜியிடம் உள்ளன்பும் நன்மதிப்பும்

உண்டாயின. முடிவில் சிவாஜி ஆக்ரா நகரை யடைந்து தமது வரவைப் பாதுஷாவுக்கு அறிவிக்குமாறு ராம்ஸிங்கைத் தூதனுப்பினர். ஔரங்கசீப் தூதன் மூலமாய் விஷயம் அறிந்து கொண்டார். ஆயினும் அவர் மரியாதையின்றிச் சாதாரணமான ஒருவனை வரச்சொல்வது போலச் சிவாஜியை வரச்சொல்லினர். அவர் அச்சிறுமையை வெளிக்காட்டாமல், பாதுஷாவைப் பார்க்கச் சென்றனர். ஔரங்கசீப் கொலுவிருந்தார். சிவாஜி அங்குச் சென்று அக்கால முறைப்படி அவரை வணங்கி முப்பதினாயிரம் ரூபாவை அவருக்குக் காணிக்கையாக வைத்தார்.

ஒரு பெரும் பகைவர் வந்து தம்மை வணங்கியதை ஔரங்கசீப் பாராட்டவில்லை. ஒருவரைச் சிநேகிதர் ஆக்கும் சாதுரியம் அவரிடம் இல்லாமையோ, அல்லது தாம் பெரிய பாதுஷா என்று அவர் கொண்ட செருக்கோ, அல்லது அவற்றைப்போன்ற யாதோ ஒன்று அவரைக் கெடுத்துவிட்டது. பாதுஷா இம்மகா வீரருக்கு ஏற்ற மரியாதை செய்யாமல், அவரை இரண்டாம் தரத்தினரான சேனைத் தலைவரில் ஒருவராக இருக்குமாறு கட்டளை தந்தனர். 'பலர் கூடிய சபையில் நாம் இவ்வாறு நடத்தப்படுவோம்'

என்பதைக் கனவிலும் நினையாத சிவாஜி, அவமானத்தால் வருத்தமுற்றனர்.

தமக்கு நேர்ந்த மனவுளைச்சலை அவர் ராம்ஸிங்கிடம் தெரிவித்துத் தாம் வந்ததற்கு இரங்கினர். அவனும் பாதுஷாவின் செயலைக்கண்டு வருந்தினன். அப்போது தமக்குண்டான அவமானத்தைப் பொருத சிவாஜி, பாதுஷாவைப் பார்த்து, 'நீங்கள் என்னை இங்கு வரச்சொன்னதால் வந்தேன். இவ்வாறு என்னைக் கேவலமாய் நடத்துவீர்களென்று நான் அறிந்திருந்தால், இங்கே வருவதற்கு மனங்கொள்ளேன்' என்று கூறினர். ஔரங்கசீபுக்குக் கோபம் பொங்கிவிட்டது. உடனே அவர் சிவாஜியை நோக்கி 'சரி, நீர் என் கொலுமண்டபத்திற்கு வரவேண்டாம்; ஏதாவது செய்தி இருப்பின் தூதரிடம் சொல்லியனுப்புக' என்று கூறித் தமது தளகர்த்தனை அழைத்துத் தாஜ்மஹாலுக்குப் பக்கத்திலுள்ள மாளிகையில் அவரைச் சிறை வைக்கும்படி இரகசியமாக ஆணையிட்டனர்.

அங்ஙனமே சிவாஜியும், சாம்பாஜியும் அம்மாளிகையிற் கொண்டுபோய் விடப்பட்டனர். அம்மாளிகையைச் சுற்றி, மொகலாய வீரர்கள் காவல் வைக்கப்பட்டனர். எனவே, சிவாஜி ஒரு சிறையாளனைப்போல் தாம் நடத்தப்பட்ட

தாக உணர்ந்தனர். அம்மாளிகையை விட்டு வெளிப்பட்டால் தமக்குப் பிராணாபத்து நேரிடு மென்று அவர் கருதினர். பின்பு அவர் ஒரு தூதனை யனுப்பித் தம்மை விட்டுவிடுமாறு ஔரங்கசீபைக் கேட்டனர். அத்தூதன் மொழி களுக்கு அவர் செவிகூடச் சாய்க்கவில்லை. பிறகு ராம்ஸிங்கைச் சிவாஜி பாதுஷாவிடம் அனுப்பி னார். 'சிவாஜியை விடுவிப்பதாக இருந்தால், சாம் பாஜியை அங்குப் பிணையாளாக விட்டுச்செல்ல லாம்' என்று ஔரங்கசீப் கூறினார். அதுசெய்யச் சிவாஜிக்கு இஷ்டமில்லை. உடனே அவர் தம் சேனைகளை ஊருக்குச் செல்லவிடுமாறு அனுமதி வேண்டினர். சிவாஜியின் தந்திரம் அறியாத பாதுஷா, அச்சேனைகள் செல்வது அனுகூல மென்று அதற்கு இணங்கினார். உடனே சிவாஜி அந்தரங்கமான சில நண்பரை அந்நகரில் இருக் கச் சொல்லிவிட்டுச் சேனையைச் சொந்த ஊருக் குப் போகச் சொன்னார். அச்சேனாவீரர் துன்பக் கடலில் மூழ்கித் தம் ஊரை யடைந்தனர்.

அதன் பிற்பாடு சிவாஜி சிறைக்கூடத்தினின் றும் வெளிப்படுவதற்குரிய உபாயங்களை ஆராய்ந் தனர். முடிவில் அவருக்கு ஒரு யுக்தி தோன் றிற்று. அது அவருடைய நுண்ணிய அறிவுக் கன்றி வேறெவர்க்கும் தென்படல் அரிது. சம

யோஜித புத்தியும், மனோ தைரியமும் வாய்ந்தவர்க்கு இவ்வுலகத்தில் செயற்கரிய காரியமும் உண்டோ? முதலில் தம்நாட்டிற்குச் செல்லும் விருப்பம் இல்லையென்றும் தம் குடும்பத்தாரையும் அங்கு அழைத்துவரவேண்டுமென்றும் அவர் சிறைகாக்கும் தலைவனிடம் வஞ்சகமாகக் கூறினார். சிறையிலிருந்த சிங்கத்துக்கு ஔரங்கசீப் நாடோறும்வேண்டிய பண்டங்களை அனுப்பி வந்தனர். தாமுபயோகித்ததுபோக மீதியைத் தின்பண்டங்களாகச் செய்து அடுத்திருந்தவர்களுக்கு அவர் கொடுத்துவந்தனர். அதுமுதல் பெரிய கூடைகளில் பக்ஷணங்களை வைத்து அவற்றை அவ்வூரிலிருந்த நண்பருக்கு அடிக்கடி அவர் அனுப்பி வந்தனர்.

ஒருசமயம் அவர் வியாதியடைந்ததாகக் கூறினர்; வைத்தியர்கள் வந்து வேண்டியன செய்தனர். சின்னாட்களில் அவர் சொஸ்தமடைந்து வருவதாக அவர்கள் கூறினார்கள். தாம் பிழைத்தெழுந்த செய்தியை தம் நண்பர்கள் அறிந்து மகிழும்படி அவர்களுக்கு முன்னையிலும் பதின்மடங்காகத் தின்பண்டங்களை அனுப்பவேண்டுமென்றும், அதற்குப் பெரிய கூடைகள் வேண்டுமென்றும் அவர் கூறினர். அவ்வாறே பெரிய கூடைகள் கொடுக்கப்பட்டன.

அவற்றுள் ஒன்றில் சாம்பாஜியை வைத்துச் சிவாஜி மூடினர். மற்றொன்றில் தாமே உட்கார்ந்து கொண்டனர். அவர் வேலைக்காரர்கள் அக்கூடைகளைத் தூக்கிக்கொண்டு வழக்கமே போல வெளியேறிச் சென்றனர். அவர்களில் ஒருவன் மட்டும் அவரைப்போல வேஷம் போட்டுக்கொண்டு படுக்கையில் படுத்திருந்தான். மறு நாட் காலையிலும் ஒரு சிறுவன் போலி சிவாஜிக்குக் குற்றேவல்செய்துவிட்டுப் போனான்.

கூடையைத் தூக்கிக்கொண்டு வேலையாட்கள் சிவாஜியையும் சாம்பாஜியையும் தங்கள் பீஷ்வாவின் மைத்துனர் வீட்டுக்குக் கொண்டு போயினர். கூடைகளில் வந்த இரு விருந்தினரையும் எதிர்பார்த்திருந்த அவ்வீட்டார், அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்தனர். நெடுநேரம் அங்கிருப்பின், தம்முடைய இரகசியம்வெளிப்படுமென்பது சிவாஜிக்குத் தெரியுமன்றோ? உடனே அவர் தலையை மொட்டையடித்துக்கொண்டு, காவி வஸ்திரம் அணிந்து, உடல் முழுவதும் திருநீறு பூசி ஒரு துறவிபோல் ஆயினர். சாம்பாஜி சிறுவனாக இருந்ததாலும், இருவரும் ஒருங்கே சென்றால் பகைவர் அறிந்து கொள்ளக் கூடுமென்று அவர் நினைத்ததாலும் அவர் தம தருமைப் புதல்வனைத் தக்கவரிடம் சேமப்படுத்தி

வைத்துத் தாம் மட்டும் வெளியேறிப் புறப்பட்டனர். இதற்குள் போலி சிவாஜியும் தன் உண்மையான உருவுடன் கடைத்தெருவுக்குச் சென்று திரும்புவதாகச் சொல்லிவிட்டுச் சிறைக்கூடத்தினின்று வெளிப்பட்டுச் சென்றான்.

மறுநாட்காலையில் சிவாஜியிருந்த மாளிகையில் ஒருவரும் இல்லை. இந்தச்செய்தி ஔரங்கசீபுக்கு அறிவிக்கப்பட்டது. அவர் சிறைக்கூடக் காவலரைக் கடிந்துரைத்தார். அதனாற் பயன் ஒன்றுமில்லை. ஆதலின் அவர் சிவாஜியைச் சுற்றிடங்களில் தேடச்சொன்னார். சிவாஜிக்கு இவ்விஷயம் தெரிந்தது. அவர் நேரே ஊருக்குப் போகாமல் காசி, பிரயாகை, கயை முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு அங்கிருந்து வங்காளம் சென்று, அங்கிருந்து இந்தூர் அடைந்தார். அவர் அங்கும் தங்காமல் நடந்து சென்று தமது நாட்டில் புனா நகரத்தைச் சேர்ந்தனர். அதன்பின் மொகலாயர் சிவாஜியை என்ன செய்யமுடியும்? அவர் இவ்வளவு தூரம் பிரயாணம் செய்வதற்கு அவருக்குப் பத்து மாதங்கள் ஆயின.

தமது வெளிப்பாட்டையும், விஜயத்தையும் இராஜ்யம் எங்கும் சிவாஜி அறிவித்தனர். நாடு முழுதும் ஆனந்த வாரிதியில் ஆழ்ந்தது. பின்பு

அவர் புனாவில் இருந்து ராஜகடாவை 1665-ஆம் வருஷம் டிசம்பரில் அடைந்து, தம் அன்னையை நமஸ்கரித்தார். அத்தாயும் தனயனைக் கண்ட போது அடைந்த களிப்பை எடுத்துரைக்க யாரால் ஆகும்? அவர் மனைவியரும் அவரை அன்போடு வரவேற்றனர். கொஞ்சக் காலத்தில் சாம்பாஜியும் சிவாஜியைப்போல் வந்து சேர்ந் தான். தாமும், தம் குமாரனும் உயிர் தப்பிவருவதற்கு உதவி புரிந்த நண்பர் நால்வருக்கும் சிவாஜி தலைக்கு 25 லக்ஷம் ரூபா மனமுவந் தளித்து உபசார மொழிகளும் கூறினர்.

இது இங்ஙனமாக, தமக்கு அவமானத்தையும் துன்பத்தையும் இழைத்த பாதுஷாவை எதிர்க்க வேண்டுமென்ற எண்ணம் சிவாஜியின் மனத்தில் நிலைபெற்றோங்கியது. முற்கூறியபடி ஜயஸிங் நீண்டகாலம் பீஜப்பூரை முற்றுகையிட் டுக்கொண்டிருக்கையில், பீஜப்பூர் சுல்தான் கோல் கொண்டா சுல்தானைத் தமக்குப் படை கொடுத்து உதவி புரியுமாறு வேண்ட, அவரும் அங்ஙனமே செய்தனர். ஜயஸிங் இச்செய்தியைப் பாதுஷா வுக்கு அறிவித்து அவரிடமிருந்து மறுமொழி வருமட்டும் முற்றுகையை நிறுத்திவிட்டுத் தாரூர் என்னுமிடத்துக்குச் சென்றார். அச்சமயம் சிவா ஜியும் ஒரு பெரும் படையைத்திரட்டிக் கொங்க

ணத்திலிருந்த மொகலாய சேனையை எதிர்த்த னர். மொகலாயர் பின்னிட, கொங்கணத்தையும் அதிலிருந்த கோட்டைகளையும் அவர் தம் கை வசப்படுத்திக்கொண்டார். ஔரங்கசீப் ஜயஸிங்கைச் சந்தேகித்து, அவரை டில்லிக்கு வரச் சொல்லிவிட்டு, முசீம் என்ற தமது புத்திரரைச் சேனைத்தலைவராக்கித் தக்கணத்திற்கு அனுப்பினார்.

முசீம் தக்கணத்திற்குச் சென்றார். அவர் போரை விரும்பாத குணமுடையவர்; சிவாஜியின் குணத்தில் ஈடுபட்டவர். எனவே, சிவாஜியோடு இவர் 1668-ல் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர். பீஜப்பூர் சுல்தானும் மொகலாயருடன் சமாதானம் செய்துகொண்டனர். சிவாஜி தாம் செய்துகொண்ட உடன்படிக்கையால், தமக்கு முன்னிருந்த கோட்டைகளைத் திரும்பப் பெற்று முன்னிலும் அதிகமான செல்வாக்கும் வலிமையும் பெற்றார். ஔரங்கசீபுக்கு அந்த உடன்படிக்கை பிடிக்கவில்லை. ஆயினும் அவர் செய்யத்தக்கது என்ன?

அதன்மேல் சிவாஜி பீஜப்பூர் மாகாணத்தில் சௌத் என்னும் வரியைத் தண்ட ஆரம்பித்தார். அந்த மாகாணத்தின் மந்திரி வருஷந்தோறும் சிவாஜிக்கு மூன்றுலக்ஷம் ரூபா கொடும்

பதாக ஒப்பிச் சமாதானம் செய்துகொண்டான். அதேமாதிரி கோல்கொண்டாவும் வருஷத்துக்கு ஐந்துலக்ஷம் ரூபா கொடுப்பதாக ஒப்புக்கொண்டது. அவர் அதனுல் தம் சேனையைப் பெருக்கிக் கொண்டார்.

1670-ல் ஒரு மொகலாய சேனையோடு அவர் கடும்போர் புரிந்து அவர்கள் கைவசமிருந்த சிம்மகடா என்னும் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டார். இப்போரில் சிவாஜியின் சேனைத் தலைவனுன தாஞ்ஞஜி இறந்துபோனுன். அதைக் கேள்வியுற்ற சிவாஜி அடைந்த துக்கத்திற்கு அளவே இல்லை. அதன் பிறகு அவர் சேனை மொகலாயர் கைப்பற்றிய புரந்தரன்கோட்டையைக் கைவசமாக்கிக்கொண்டது. அவர் சேனைத் தலைவரில் ஒருவன் காண்டிஷ் மாகாணத்திற் சென்று, அதை வென்று சௌத் வசூலித்து வந்தான். மொகலாயர் பிரதேசங்களில் சௌத் வசூலித்தது அதுவே முதன் முறையாகும். அந்தத் திக்குவிஜயத்தில் கிராம உத்தியோகஸ்தர்களிடத்தில் அவர்கள் தாங்கள் வசூலிக்கும் அரசிறைப் பணத்தில் நான்கிலொருபாகத்தைச் சிவாஜியினிடத்திலேனும் அவர் பிரதானிகளிடத்திலேனும் செலுத்தக்கடவதாக எழுதி வாங்கிக்கொண்டதே மிகவும் முக்கியமானதோர் காரிய

மாகும். அவர் தாம் பெற்றுக்கொள்ளும் பணத்துக்குச் சீட்டுக்கள் கொடுப்பதாகவும் அந்தச் சீட்டுக்களே அவர்கள் நாடும் ஊரும் கொள்ளை போகாமல் இருப்பதற்கான ஆதரவுகளாமென்றும் வாக்களித்தார்.

இங்ஙனம் சிவாஜி வெற்றிமேல் வெற்றி பெற்று, மொகலாயர் தமது இராஜ்யத்தில் கைப்பற்றி இருந்த எல்லாப் பிரதேசங்களையும் மெல்ல மெல்லத் தம் கைவச மாக்கிக்கொண்டனர். சிவநேரி என்னும் கோட்டை அச்சமயம் மொகலாயர் வசம் இருந்தது. அது சிவாஜியின் பிறப்பிடமன்றோ? ஆதலால் அதைக் கைப்பற்றுவதற்கு ஒரு பெருஞ்சேனையை அவர் அனுப்பினர்; பிறகு ஜஞ்சீராக் கோட்டையைப் பிடிக்க எண்ணி அங்கே சென்றார். அதன் தலைவனான படேகான் சிவாஜியோடு போர் செய்வது அசாத்தியமெனக் கண்டு அவரோடு ஒரு உடன்படிக்கை செய்து கொண்டான். அவனுடைய உதவித்தலைவர்கள் அவனைச் சிறைசெய்தனர்; அப்பால் சிவாஜியை எதிர்க்கும்படி சேனைகளை அனுப்புமாறு பீஜப்பூருக்கும், டில்லிக்கும் இலிகிதம் போக்கினர். ஒரு மொகலாய சேனை அவர்களுக்கு உதவியாக வந்தது. அப்போது உதவித் தலைவர்கள் அச்சேனையோடு கூடிச் சிவாஜியை எதிர்த்து அவர் கப்பற்

படையைத் தோற்கடித்தனர். ஆயினும் சிவாஜி சூரத் நகரை 1670-ல் இரண்டாம்முறை சூறையாடி அங்கே ஏராளமான பொருளைக் கைப்பற்றிக் கொண்டனர். சூரத்நகரில் வர்த்தகம் செய்த மேல்நாட்டு வியாபாரிகளுக்கும் கொஞ்சம் இடையூறு உண்டாயிற்று. அப்போது இங்கிலீஷ்காரர் மட்டும் அவரோடு உடன்படிக்கைசெய்துகொண்டனர். சூரத்நகரில் கிடைத்த பொருளை எடுத்துக் கொண்டு அவர் ராஜகடாவுக்கு மீண்டுவருகையில், தாவூத்கான் என்னும் மொகலாய சேனைத் தலைவன் பெரும்படையுடன் அவரைத் தாக்கினன். இரண்டு படைகளுக்கும் கடும் போர் நடந்தது. முடிவில் சிவாஜியே வென்றார். மொகலாய சேனை மகாராஷ்டிர சேனையை எதிர்க்க முடியாமல் பறந்துவிட்டது. அப்போது மொகலாயருக்குப் பெருத்த நஷ்டம் உண்டாயிற்று. நீண்ட காலமாகத் தக்க தலைவர்களாற் படைப்பயிற்சி செய்யப்பட்ட மொகலாய சேனையைத் தோற்கடித்த மகாராஷ்டிர சேனையின் வல்லமையைப் புகழாதார் இல்லை.

இதன் பிற்பாடு இரண்டு வருஷகாலம் மொகலாயரோடும் பீஜப்பூர் அரசர் முதலியவரோடும் சிவாஜி விடாத சண்டை செய்ய வேண்டியவர் ஆயினர். அச்சண்டைகள் சிலவற்றில் சிவாஜி

தோற்றனரேனும், பலவற்றில் வெற்றிபெற்று மகாராஷ்டிர குலத்துதித்த ஒரு சிங்கம்போல் விளங்கினர். மொகலாயரும் பீஜப்பூர் சுல்தான் முதலியோரும் அவர் ஊக்கத்துக்கும், விடாமுயற்சிக்கும், வெற்றிக்கும் முன்னிற்க முடியாது பின்னடைந்து சென்றனர். எனவே, அவர் ஒரு மகாராஷ்டிர இராஜ்யத்தை நிலைநாட்டும் முயற்சியில் சித்திபெற்றவர் ஆயினர்.

13. சிவாஜியின் மகுடாபிஷேகம்.

தேச விசாலமும், செல்வமும், செல்வாக்கும், தெய்வ பக்தியும் ஒருங்கேபெற்ற சிவாஜி அக்காலத்தில் மகுடாபிஷேகம் செய்துகொள்ள நிச்சயித்தனர். முன்னர் அரசன் என்ற பட்டம் பிறரால் அவருக்குக் கொடுக்கப்பட்டதன்றோ? ஆயினும் இந்துக்கள்செய்துகொள்ளும் புராதன முறைப்படி பட்டாபிஷேகம் செய்துகொள்ள வேண்டுமென்பது அவருடைய அவா. சிற்றரசரும் அங்ஙனம் செய்துகொள்வது வழக்கமென்றால், உத்தம வீரரும், பேரரசருமாகிய சிவாஜி அங்ஙனம் செய்துகொள்வது தக்கதே ஆகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அவருடைய எண்ணத்தைக் காரியதரிசிகளும் தக்கதேயாமென ஏற்றுக்கொண்டனர். அதற்காகக் காசியி

லிருந்து ஆசில் வேதியரை வரவழைக்கவேண்டு மென்று அவர்கள் கூறினர். பிறகு இவ்விஷயங் களை அவர் தம் தாய், குரு முதலிய பெரியோர் களை அடிபணிந்து அவர்களிடம் சொல்லினர். அவர்களும் அம்மகுடாபிஷேகம் நடத்தவேண் டுவதேயாம் என்றனர். அதற்குள் வாரணாசியிலி ருந்து ஓர் ஆரண வேதியர் தற்செயலாய் ஆங்கு வந்து சேர்ந்தனர். அவர் பெயர் கங்கா பட்டர். அவர் சிவாஜியின் அபிப்பிராயத்தின் பிரகாரம் மகுடாபிஷேக விழாவை விதிப்படி நிறைவேற் றுவதாக ஒப்புக்கொண்டனர்.

மகுடாபிஷேகத்திற்குரிய ஏற்பாடுகள்யாவும் நடைபெற்றன. அது ராஜ கடாலில் நடத்தப் படவேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டது. மகுடா பிஷேகத்துக்குரிய நாள் 1674-ஆம் வருஷம் ஜூலை மாதம் 6௳ அன்று குறிக்கப்பட்டது. ராஜகடாவிலுள்ள கோட்டையும், கொலுமண்ட பமும் வெகு விசித்திரமாக அலங்கரிக்கப்பட் டன. கொலு மண்டபத்தில் பொன்னில் நவரத் தினங்கள் இழைத்த அரியாசனம் அமைக்கப் பட்டிருந்தது. ஜீஜாபாயும், சிவாஜியின் இரு மனைவியரும் குறித்த வேளையில் அங்கு வந்தி ருந்தனர். பிரபுக்களும் சிற்றரசரும் உற்றோரும் மற்றோருமாக எண்ணில் அடங்காதவர்கள்

அங்குவந்து கூடினர். சுருங்கச்சொல்லின், அத்திருவிழாவுக்குரிய காரியங்கள் யாவும் சித்தமாயிருந்தன. குறித்த நல்வேளை நெருங்குதலும், சிவாஜி கங்கா பட்டரை எதிர்சென்று அழைத்து வந்தனர்.

கங்காபட்டர் ஓமம் வளர்த்து அவருக்கு முப்புரிநூல் தரிப்பித்து, உத்தம க்ஷத்திரியருக்குக் கூறியவிதிப்படி மகுடாபிஷேகமும், பட்டாபிஷேகமும் செய்தனர். அப்போது முரசு சங்கம் முதலிய மங்கல வாத்தியங்கள் முழங்கின. அந்தணர் பல்லாண்டு இசைத்தனர்; கற்புடைக் காரிகையர் பலர் ஆலாத்தி எடுத்தனர்; குடிகள் யாவரும் 'சிவாஜிக்கு மேன்மேலும் வெற்றியுண்டாகட்டும்' என்று பன்முறை ஆர்ப்பெடுத்தனர். அவருடைய நாட்டிலுள்ள ஒவ்வொரு கோட்டையிலும் பீரங்கிகள் அதிர்ந்தன. ஆடை ஆபரணங்களும், பரிசுகளும் பலர்க்கும் கொடுக்கப்பட்டன; மானியங்களும், தானங்களும் பல நண்பர்க்கு வழங்கப்பெற்றன. அன்றே அவர் துலாபாரம் புக்கனர்; அவர் எடையுள்ள 16,000 வராகன் பெறுமான செம்பொன் அந்தணர் முதலியோர்க்குத் தானமாக அளிக்கப்பட்டது. யாவற்றிலும் மேலாக, அன்று அங்கு வந்திருந்தோர்

யாவரும் அறுசுவையுண்டி வயிறாரவுண்டு சிவாஜி மன்னரை வாயார வாழ்த்தினர்.

சிவாஜியின் மகுடாபிஷேக மகோற்சவத்தைக் கண்டு களிக்குமாறு ஆங்கில வியாபாரிகளின் பிரதிநிதியாக ஆக்ஸன்டன் என்றவரும் அங்கு வந்திருந்தனர். அச்சமயம் அவர் தங்கள் வியாபாரம் இனிது நடைபெறும்படி சில வரங்களை அவரிடம் கேட்டனர். அவர் அவற்றில் பலவற்றை மனமுவந்து அளித்தனர். அப்பொழுது இங்கிலீஷ்காரர் அவருடன் ஒரு உடன்படிக்கையும் செய்துகொண்டனர். இங்ஙனம் அவர் மகுடாபிஷேகம் மிக்க சிறப்பாய் நடந்தேறியது

---

14. சிவாஜியும் வெங்காஜியும்.

சிவாஜியின் மகுடாபிஷேகம் நிறைவேறிய பின், சிறிது காலத்தில் ஜீஜாபாய் உம்பர் நாடு உற்றனள். அன்னையின் மரணத்தால் சிவாஜி எவ்வளவு துன்பமுற்றனர் என்பது இதைப் படிப்போர்க்கு விளங்காமற் போகாது. தாயின் உத்தரக்கிரியைகளை அவர் ராஜ கடாவில் சிரத்தையுடன் செய்து முடித்தனர்.

தம் தாய் காலஞ்சென்ற பிற்பாடும், அவர் தாம் எடுத்த முயற்சியைக் கைவிடாமலும், தம் வெற்றிக்குக் காரணமான படைப் பயிற்சியை

விடாமலும் நடத்தி வந்தனர். அவர் அரியணை ஏறிய வருஷத்தில் அவருடைய சேனைத்தலைவர் போர்த்துகல் தேசத்து வியாபாரிகளை எதிர்த்துச் சௌத் என்னும் வரியைக் கட்டும்படி வற்புறுத்தினர். அவர்களும் 'சிவாஜியை எதிர்ப்பது எளிதன்று' என்று துணிந்து, அவருக்கு ஏராளமான பணத்தைக் கொடுத்து அனுப்பினர். பிறகு அவர் தாம் பிறந்த சிவனேரிக்கோட்டை முதலிய பல இடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர்.

ஷாஜிக்குத் தென்னிந்தியாவில் சில ஜாகீர்கள் இருந்தன அல்லவா? அவை சிவாஜியின் மாற்றாந்தாயின் குமாரரான வெங்காஜியின் வசம் இருந்தன. அவற்றோடு தஞ்சாவூர்ச் சீமையையும் அவர் ஆண்டு வந்தனர்.

தஞ்சாவூர் அவருக்குட்பட்டதெப்படியென்று பார்ப்போம். தஞ்சாவூரில் பழைய நாயக்க வம்சத் தரசர்களில் விஜய ராகவ நாயக்கர் என்பவர் ஆண்டு வருகையில், அவர் தம் மகளை மதுரை மன்னரான சொக்கநாத நாயக்கருக்கு மணஞ் செய்விக்க இசையாமையால், மதுரை நாயக்கர் கோபங்கொண்டு தம் சேனையை அனுப்பித் தஞ்சாவூரைக் கைப்பற்றிக்கொண்டார். போரில் தஞ்சை ராஜகுடும்பம் அழிந்தது. ஆயினும் விஜயராகவருடைய நான்கு வயது இளங்குழந்

தையான செங்கமலதாசர் நம்பிக்கையுள்ள ஒரு தாதியின் மூலமாய்த் தப்பி நாகப்பட்டினத்திற்குச் சென்று அங்கு ஒரு வணிகனால் ஆதரிக்கப்பட்டு வளர்ந்து வந்தார். அவர் தந்தையாரின் சமஸ்தானத்தில் ஒரு உத்தியோகஸ்தராயிருந்த ராயசம் வேங்கன்ன என்பவர் அவரைத் தக்க பாதுகாப்புடன் பீஜப்பூர் சுல்தானிடம் அழைத்துச் சென்று அவர்க்குத் தஞ்சையைக் கைப்பற்றிக் கொள்வதற்கு உதவி செய்யும்படி அவரை வேண்டினார். சுல்தானும் அதற்கிசைந்து ஷாஜியின் குமாரரான வெங்காஜியை ஒரு சேனையோடு அனுப்பித் துணை செய்தார். விரைவில் மதுரை நாயக்கருடைய பிரதிநிதி தோல்வியுற்றார்; செங்கமல தாசரும் தஞ்சாவூருக்கு அதிபதியானார். ஆனால் அவருக்கு உதவியாயிருந்த வெங்கன்ன தமக்கு மந்திரிப்பதவி கிடையாமையால் அவரிடம் வெறுப்புக்கொண்டு கும்பகோணத்தில் தங்கியிருந்த வெங்காஜியிடம்போய்த் தஞ்சையை அவரே கைக்கொண்டு ஆளலாம் என்று சொல்லி அவருக்கு ஆசையுண்டாக்கினார். முதலில் வெங்காஜி அதற்கு இணங்கவில்லை யாயினும், பிறகு யாதுகாரணம் பற்றியோ அவ்வாறே செய்ய வெண்ணிப் படையெடுத்துச்சென்று, தஞ்சை நகரைப் பிடித்துக்கொண்டார். ஆனால் வெங்

கன்ஞ நம்பத்தகாதவர் என்று கண்டு அவரிடம் அவர் வெறுப்புக்கொள்ளவே, வெங்கன்ஞ அங்கிருந்து எங்கோ தப்பிச் சென்றுவிட்டனர்.

இவ்வாறு தஞ்சை யரசராகிய வெங்காஜி அரசியலில் சிவாஜியைப்போல் அவ்வளவு சதுரர் அல்லர். அவர் தமது அந்தரங்கமான அமைச்சரிடம் மனஸ்தாபப்பட்டுக்கொண்டனர். அச்சமயம் சிவாஜி, அவர் வசமிருந்த தம் தந்தையின் ஜாகீர்களில் தமக்குரிய பாகத்தைப்பெற நிச்சயித்தனர். அதற்காகத் தமது நாட்டில் எவ்விதக் குழப்பமும், கலகமும், படையெடுப்பும் உண்டாகாதபடி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, அவர் ஒரு சிறு படையுடன் தம் தம்பியிருக்குமிடம் நோக்கிப் புறப்பட்டனர். புறப்பட்டவர் ஐதராபாத், கடப்பை வழியாகச் சென்றனர். வழியிலுள்ள புனித தீர்த்தங்களில் அவர் நீராடி, புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்தனர்; ஆங்காங்கு சத்திரங்களையும், மடங்களையும் கட்டுவித்து அவற்றில் அன்னதானமும், சொன்னதானமும் செய்வித்தனர்.

முடிவில் அவர் செஞ்சிக்கோட்டையை அடைந்தனர். அதன் தலைவன் ஷேர்கான் என்பவன். அவன் 5,000 குதிரைப் படையுடன் சிவாஜியை எதிர்த்தான். சிவாஜி அவனை முதுகு

காட்டி ஓடும்படி அடித்தார். பின்பு கானுடைய எட்டு மக்களும் அவரை எதிர்த்துத் தோல்வி யடைந்தனர். அவர் அவர்களுக்குச் சில பூமி களைக் கொடுத்துவிட்டுச் செஞ்சியைக் கைப்பற் றிக் கொண்டனர். அப்பால் அவர் தம் சேனைகளை இரு கூறாக்கி, ஒருபாகத்தை வேலூரை எதிர்க்கு மாறு அனுப்பிவிட்டு, மற்றொரு பகுதியைக் கூட் டிக்கொண்டு தஞ்சாவூருக்குச் சென்றனர்.

அந்நகரை யடுத்ததும், வெங்காஜிக்கு அவர் ஒரு கடிதம் அனுப்பினர். அதில் அவர் தம் தந் தையாரான ஷாஜிக்குச் சொந்தமான நாட்டிலும் பணத்திலும் பாதியைக் கொடுக்கும்படி கண்டி ருந்தனர். வெங்காஜிக்கு அங்ஙனம் செய்யப் பிரி யமில்லை யாயினும், முடிவில் சமாதானமே தக்க தென்று மதிமந்திரிகள் கூறினர். அதனை ஏற்றுக் கொண்டு, வெங்காஜி அண்ணனரைக் காணச் சென்றனர். சிவாஜியும் தம் அனுசரை எதிர்சென் றழைத்து உட்காரச் சொல்லினர். சகோதரர் இரு வரும் நெடுநேரம் பேசியும் ஒரு முடிவுக்கும் வந் திலர். வெங்காஜி தஞ்சைக்கு மீண்டனர். பிறகு இருவருக்கும் போர் மூண்டது. அதில் வெங்காஜி தோல்வியுற்றனர்.

பின்பு வெங்காஜியின் தருமபத்தினியாகிய தீபாபாய் தன் கணவனுக்குப் பல நன்மதிகளைக்

கூறிச் சிவாஜியோடு சமாதானம் ஆகும்படி தூண்டினள். அங்ஙனமே வெங்காஜி அவரோடு சமாதானம் செய்து கொண்டனர். சிவாஜியும் மனமுவந்து தஞ்சாவூரையும் அதனைச் சூழ்ந்த இடங்களையும் தம் தம்பியார்க்குக் கொடுத்து, அவருடைய நன்மதிபடைத்த மனைவிக்குப் பங்களூரையும் அதனைச் சூழ்ந்த பாகத்தையும் அளித்தனர். அப்பால் அவர் சமாதானத்தோடும் வெற்றியோடும் மீண்டு தமது தலைநகரை அடைந்தனர். சிவாஜி தஞ்சைக்குச்சென்று திரும்பப் பதினெட்டு மாதங்கள் ஆயின. அவர் பிரயாணம் செய்த தூரமோ எழுநூறு மைலுக்கும் அதிகம்.

---

15. அரசியல்.

சிவாஜிமன்னர் அஞ்சாத நெஞ்சுபடைத்த மகா வீரர் என்றும், நுண்ணறிவாளர் என்றும், மகாராஷ்டிர சாம்பிராஜ்யத்தை ஸ்தாபித்த தேசாபிமானியென்றும் இதுவரை கூறியவற்றால் விளங்கும். அவர் முற்கூறிய இயல்புகளெல்லாம் வாய்ந்திருந்ததுபோலவே, அரசாட்சி செய்யும் திறனும் பெரிதும் பெற்றிருந்தார். அரசருக்குரிய குணங்கள் அவரோடு கூடவே பிறந்திருந்தன என்னலாம். அவற்றோடு உலகானுபவமும் சேர்ந்து அரசியல் அறிவை அவரிடத்

துப் பூரணமாக்கியது. கல்வி அறிவே உலகானுபவத்தினும் சிறந்தது என இவ்வுலகம் நினைப்பதுண்டு; ஆயினும் உலகானுபவமே மற்றதனிலும் சிறந்தது என்பதற்குச் சிவாஜியே ஏற்ற சான்றுவர். அவர் எழுதப்படிக்கத் தெரியாதவர் என்பதே சரித்திரக்காரர் துணிபு. எனினும், செம்மையாய் அரசாளுதற்காக அவர் செய்த ஏற்பாடுகள் அவருடைய அளவுகடந்த அனுபவத்தின் முதிர்ச்சியை விளக்குகின்றன. அவர், உத்தியோகங்களைப் பரம்பரையாகச் சிலர் அனுபவிக்கவிடாமல், அவ்வப்போது தக்கவர்களாயுள்ளவர்களுக்குக் கொடுத்து வந்தனர்; அதிகாரிகளுக்கு மானியம் விடாமல் மாதச் சம்பளமே அளித்தனர்; குடிகளிடம் தாமே தம் உத்தியோகஸ்தர்கள் மூலம் வரிவாங்கினர். இவைகள் யாவும் மிகவும் நல்ல ஏற்பாடுகளே. இவைகளைப் போலவே தம் படையில் ஜாதி மதபேதம் பாராமல் ஏற்றவர்கள் எல்லாரையும் தடையின்றி அவர் சேர்த்துவந்ததும், * நாடாளும் அதிகாரத்துக்குப் படையின் வலிமை கட்டுப்பட்டிருக்கவேண்டுமென்று திட்டஞ்செய்ததும் ஆகிய காரியங்கள் பாராட்டத் தக்கன அல்லவா?

அவர் தமது நாட்டைப்பிராந்தியங்கள் என்னும் பல பாகங்களாகப் பிரித்தனர். அவற்றில்

---

* Subordination of the Military power to Civil authority.

ஒவ்வொன்றும் ஏறக்குறைய தற்போதுள்ள ஜில்லாவின் அளவை உடையது. அவர் ஆட்சியில் பதினுன்கு பிராந்தியங்கள் இருந்தன. அவைகள் பிற்காலத்தில் சுபாக்கள் என்றும், மண்டலங்கள் என்றும் பேர்பெற்றன. ஒவ்வொரு பிராந்தியமும் பல கூற்றங்களாகப் பிரிக்கப்பட்டது. கூற்றமென்பது இக்காலத்துத் தாலூகாவைப் போன்றது; ஒவ்வொரு கூற்றத்திலும் பல கிராமங்களும், பாடிகளும், பள்ளிகளும் உண்டு. ஒவ்வொரு பிராந்தியமும் லக்ஷரூபா நிலவரியைக் கொடுக்கக் கூடியது. இன்னும் தனித்தனியே மூன்று அல்லது நான்கு மண்டலங்கள் கொண்டசுபாக்கள் என்னும் பிரிவுகளும், அவைகளுக்குச் சுபேதார்கள் என்னும் அதிகாரிகளும் உண்டு. அந்தச் சுபேதார்களுக்கு மாதச் சம்பளமே கொடுக்கப்பட்டது. கிராமாதிகாரிகள் படேல், குலகர்ணி, தேசமுக்கியன் முதலியவராவர். அவர்களேயன்றி, நிலங்களை அளப்பதற்கும் பரிசோதிப்பதற்கும் மூன்று நான்கு கிராமங்களுக்கு ஒருவராக, கிராமவஸ்தார்கள் என்ற உத்தியோகஸ்தர்களும் இருந்தனர்.

அவர் காலத்தில் இக்காலத்திற்போலவே நிலவரியே அரசிறை வருமானத்தில் முக்கியமான அமிசமாயிருந்தது. அது தானியமாகவும், பணமாகவும் வசூலிக்கப்பட்டதெனத் தெரிகின்றது. நன்செய் நிலங்களின் விளைவில் ஐந்தில்

இரண்டுபங்கை அரசிறையாகச்செலுத்தவேண்டு மென்று அவர் முதலில் திட்டஞ்செய்திருந்தார். அத் தீர்வையைக் குறைக்கவேண்டுமென்று குடிகள் அவரிடம் மன்றாடிக்கேட்டு, முடிவில் விளைவில் மூன்றிலொரு பங்காக அதைக் குறைக்கப் பெற்றார்கள். புன்செய் நிலங்களுக்கும், தோட்டங்களுக்கும், மலைபடு பொருள்களுக்கும் அவ்வவற்றிற் கேற்றபடி தீர்வை விதிக்கப்பட்டது.

நிலங்கள் தங்கள் வளப்பத்திற் கேற்பப் பல தரத்தினவாகப் பகுக்கப்பட்டன; அவைகளை அளப்பதற்குத் தக்க கருவிகளும் அமைக்கப்பட்டன. சாதாரணமாக நல்ல விளைச்சல் உண்டான போது, குடிகள் தீர்வையைக் குறைவின்றிச் செலுத்தவேண்டும்; ஆனால் மழையின்மையாலோ, அதிக மழையாலுண்டாகும் கேட்டினாலோ சாகுபடிசெய்யாதிருக்கும் நிலங்களுக்கும் மானிய நிலங்களுக்கும் தீர்வை வசூலிப்பதில்லை. அவர் தரிசு நிலங்களை ஏழைகளுக்கு அளித்ததுமன்றி, பணஞ்செலவிட்டுப் பயிர்செய்யத்தக்க நிர்வாகமில்லாதவர்களுக்கு முதல் மூன்று வருஷத் தீர்வையை மன்னித்தும் வந்தார். ஒரு வருஷத்தில் ஒருவன் நிலவரி இறுக்க முடியாதவனாயிருந்தால், அவன் அதை அடுத்த வருஷத்து வரியுடன் சேர்த்துக் கட்டலாம். மேலும், நிலங்களின் விளைவை விருத்தி பண்ணிக்கொள்ளுவதற்குக்

குடிகளுக்கு அரசிறைப் பணத்திலிருந்து அவர் கொடுத்து உதவி செய்வதுமுண்டு. இவை போன்ற விவேகமான பல ஏற்பாடுகளை அவர் செய்திருந்தார்.

தமக்குச் சேரவேண்டிய அரசிறையைச் சிவாஜி தாமே நேரில் தம் உத்தியோகஸ்தர் மூலம் வசூலித்து வந்தார் என்றோம். இவ்வாறு அரசர்கள் குடிகளிடமிருந்து நேரில் தாங்களே வரிதண்டும் முறைக்கே ரயத்துவாரி முறை என்று பெயர். அவர் காலத்துக்குமுன் பலவிடங்களி லும் ஜமீன்தார்கள் குடிகளிடத்திலிருந்து வரி வசூலித்து அரசர்களுக்குச் செலுத்தி வந்தார் கள். அவ்வேற்பாடு ஜமீன்தாரி முறை என்று வழங்கப்படுகின்றது. அம்முறையில், பொருளா-சை மிக்க ஜமீன்தார்கள் குடிகளை வருத்துதலும், தாங்கள் இலாபமடையவேண்டி நிறைய வாங்கி அரசர்களுக்குக் குறையச் செலுத்துதலும் ஆகிய குறைகளிருந்ததைக் கண்டு, அவர் அவர்களை நீக்கிவிட்டுத் தக்க அதிகாரிகளை நியமித்து நில வரி வசூலிக்கச் செய்தார்; அவர்கள் வரம்பு கடந்து சென்று குடிகளை வருத்தாமலிருக்கும்படி கண்டிப்பான பல விதிகளும் அமைத்தார்.

காடுகளைக் கண்காணித்து வரவும் அவர் காலத்தில் முக்கிய அதிகாரி ஒருவரிருந்தார். குடி கள் காடுகளிலிருந்து விறகு, தழைகள் முதலிய

வற்றைத் தடையின்றிக் கொண்டு போகலா மென்ற விதி இருந்தது. ஆயினும், அதனால் அவைகள் நாளடைவில் அழிந்து போகாவண் ணம் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

சிறு வழக்குகள் கிராமப் பஞ்சாயத்தாரால் கவனிக்கப்பட்டன. பத்துக் கிராமங்கள் சேர்ந்த ஒரு வட்டத்திற்கு ஒரு நியாய ஸ்தலம் வைக்கப் பட்டது. அவற்றில், வயது சென்ற கிராமத் தலை வர்களின் யோசனையின்படி வழக்குகள் தீர்மானிக் கப்பட்டன. நாற்பது வட்டங்களுக்கு மேலாக, துரோணமுகம் என்னும் உயர்ந்த நீதி ஸ்தல முண்டு. அதற்குமேல் ராஜதானியிலுள்ள நீதி ஸ்தலத்தில் சிவாஜிமகாராஜாவே நீதிபதிகளின் தலைவராக இருந்தனர். நியாய ஸ்தலங்களெல்லா வற்றிற்கும் தலைவராக நியாயாதிஷ் என்னும் ஒரு பெரிய அதிகாரி இருந்தனர்.

சிவாஜி ராணுவத்தை மிக நன்றாகக் கவ னித்து வந்தார். சேனாவீரர்களுக்கு அக்காலத் துப் பிற மன்னரைப்போல, அவர் மானியங்கள் விடாது மாதச்சம்பளமே அளித்தார். ஒவ்வொரு வீரனையும் அறிமுகமானவரின் சம்மதத்தின் மேலே அவர் சேனையிற் சேர்த்தார். காலாட் படையில் பத்து வீரருக்கு நாயக் என்ற தலைவ னும், ஐம்பது வீரருக்கு ஹவுல்தார் என்ற தலைவ னும் ஏற்படுத்தப்பட்டிருந்தனர். இப்படியே

படிப்படியாக உயர்ந்த பல தலைவர்கள் இருந்தனர். குதிரைப் படையை அவர் வேறு விதமாகப் பிரித்திருந்தனர். காலாட் படைவீரனுக்கு மாதந்தோறும் மூன்று ரூபா முதல் ஒன்பது ரூபா வரையும், குதிரை வீரனுக்கு ஆறு ரூபா முதல் இருபது ரூபா வரையும் சம்பளம் கொடுக்கப்பட்டது. மேல் அதிகாரிகளுக்கு உத்தியோகத்துக்குத் தகுந்தபடி சம்பளமேற்பட்டிருந்தது. அவர்களில் இருநூறு ரூபா முதல் நானூறு ரூபா வரை மாதச் சம்பளம் வாங்கியவர்களும் இருந்தனர். வீரராயினும் தலைவராயினும் அரிய திறமைகளைக் காட்டிப் போர்புரிவாரானால், அவர்களுக்கு உத்தியோக உயர்வும் பரிசில்களும் அளிக்கப்பட்டன.

சேனை விஷயமாக அவர் செய்த மெச்சத் தகுந்ததோர் ஏற்பாடு மற்றொன்று உண்டு. அதாவது, சேனை வீரர்கள் போர்க்களத்துக்குச் செல்லுகையில் தங்கள் மனைவிகள் முதலிய பெண்பாலர் எவரையும் தங்களோடு அழைத்துச் செல்லலாகாது என்பதேயாம். அவர்களை அழைத்துச் செல்வதால் பல தீங்குகளுக் கிடமேற்படும் என்பது அவர் கொள்கை. இவ்வுண்மையை உணராமையால் அக்காலத்துச் சேனைகளில் அப்படிப் பட்ட சிலாக்கியமானதோர் சட்டம் இல்லை. நமது நாட்டில் கவர்னர் ஜெனரலாயிருந்து பல நல்ல புதிய முறைகளைப் புகுத்தியவரான வெல்

லெஸ்லி பிரபு காலத்திலிருந்த ஆங்கில இந்தியச் சேனைகளிற்கூட இந்த நல்ல ஏற்பாடு இருந்ததாகத் தெரியவில்லை. மேலும், வீரர்கள் அதிகாரிகளின் உத்தரவை மீறினாலும், சேனையிலிருக்க வேண்டிய முறைதவறி நடந்தாலும் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டுவந்தது. ஆதலால் அவர் சேனை மிகுந்த ஒழுங்கும், வல்லமையும் வாய்ந்ததா யிருந்தது. இக்காரணங்களால் அவர் காலத்து இந்திய மன்னர் சேனைகளில் அவருடைய சேனையே சிறந்து விளங்கியது என்னலாம்.

இந்திய மன்னர்களில் அதிகப் பணஞ் செலவழித்துப் பல கோட்டைகளைக் கட்டி அவற்றின் பயனை அடைந்தவர் சிவாஜியே ஆவர். அவர் வசம் 280 கோட்டைகள் இருந்தன. 'தக்க இடங்களில் கோட்டைகளைக்கொண்ட அரசர் பகைவர்களுக்கு அஞ்சவேண்டியது இல்லை' என்னும் உண்மையை அவர் நன்கறிந்திருந்தார். ஒவ்வொரு கோட்டைக்கும் ஹவுல்தார் என்ற ஒரு தலைவன் இருந்தான்.

'வியாபாரத்துக்கும் போருக்கும் கப்பற்படை இன்றியமையாதது' என்பதை அவர் நன்கறிந்து கப்பற்படைகளை ஏற்படுத்தி யிருந்தனர். அவரிடம் நானூறு மரக்கலங்கள் இருந்தன என்ப. அவற்றின் விலை 15 லக்ஷம் ரூபா. அவற்

றுட் சில சிறியன, சில பெரியன. அவற்றை மேற்பார்க்கவும் தக்க அதிகாரிகளை அவர் ஏற்படுத்தினர். அவர்களில் பட்டாணியர் ஒருவரும், மகாராஷ்டிரர் ஒருவரும் அவருடைய நன்மதிப்பைப் பெற்றிருந்தனர்.

முற்காலத்து இந்தியமன்னர்க் கிருந்தது போலவே, சிவாஜிவேந்தருக்கும், *ஐம்பெருங்குழுவும் † எண்பேராயமும் உண்டு. ஐம்பெருங்குழுவினரைக் கலவாமல் அவர் எக்காரியமும் செய்வதில்லை. அக்குழுவினர் சபையில் அமைச்சர் முதலான அங்கத்தினர் எண்மர் இருந்தனராதலின், அதற்கு அஷ்டப்பிரதானிகள் சபை என்று பெயர் வழங்கி வந்தது. சிவாஜி அச்சபையினருடனிருந்து செய்யும் யோசனைகள் ஓர் அறையில் இரவில் நடைபெறும்; அவர் உண்மையான உத்தியோகஸ்தரைப் பெற்றிருந்ததனாலே அவ்விஷயங்கள் வெளிவரா.

எக்காரியத்தையும் அவர் எண்ணிய வண்ணமே இனிது நிறைவேற்றினர். அவருடைய முக்கிய மந்திரிக்குப் பீஷ்வா என்று பெயர். அவர் சிவாஜி வீற்றிருக்கும் அரியாசனத்தின்

---

*ஐம்பெருங்குழு-அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதர், ஒற்றர்.

‡எண்பேராயம்—வரவு செலவு கணக்கர், பல இலாகாத்தலைவர்கள், சுற்றததார், வாயிற்காப்போர், நகர மாந்தர், படைத்தலைவர், குதிரைச் சேவகர், யானை வீரர்.

வலது பக்கத்தில் இருப்பார். அவரே அந்த மந்திரிசபைக்குத் தலைவரும், சிவாஜியின் அரசாட்சிக்குப் பொறுப்பாளருமாயிருந்தவர். அவருக்கு அடுத்த ஸ்தானத்தை வகித்திருந்தவர் சேனாதிபதி; அவரே இராணுவத்தை நடத்தி வந்தவர். இப்படியே எல்லாக் காரியங்களையும் மேற்பார்த்து வருவதற்குத் தக்க அதிகாரிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தனர். அவர்கள் எல்லாருக்கும் மாதச் சம்பளமே கொடுக்கப்பட்டதன்றி, மானியங்கள் விடப்படவில்லை. மேலும் அந்த உத்தியோகங்களை அவர் புத்திசாலிகளுக்குக் கொடுத்தனரேயல்லது, வம்ச பரம்பரையாகச் சிலர் அனுபவிக்கக் கொடுத்தாரல்லர்.

அம்மன்னர், விவசாயத்துக்கு ஜலாதாரம் முக்கியமானது என்பதை நன்கு அறிந்தவராதலால், அதற்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் நன்கு கவனித்து வருவதற்காகத் தகுந்த உத்தியோகஸ்தர் பலரை நியமித்திருந்தனர். ஏரி, குளம் முதலியவற்றைச் செப்பனிடுவதிலும் கால்வாய்களும் கிணறுகளும் வெட்டுவிப்பதிலும் அவர் ஏராளமான பணத்தைச் செலவிட்டனர்; நதிகளில் வரும் ஜலத்தைத் தடுத்துத் திருப்பிக்கொண்டுவந்து குளங்களிற் சேகரித்து வைப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்தனர்

பிரஜைகளின் க்ஷேமத்தில் அவர் பெரிதும் கருத்துக்கொண்டவர். முறைதவிராத மன்னர் ஒவ்வொருவரும் அப்படி யிருப்பாரன்றோ? நிற்க, சிவாஜி தம் குடிகளுக்காகத் தோண்டுவித்த குடி நீர்க்குளங்கள் பல; அன்றியும் கால் நடைகளின் உபயோகத்துக்கென்று பல ஏரிகளும், பெரிய குளங்களும் இருந்தன. அசோகரைப் போலவே, மனிதர்க்கும் மிருகங்களுக்கும் காணும் நோய்களைத் தீர்க்க வைத்தியசாலைகளை அவர் நிருமித்தார். அவர் காலத்து வைத்தியர்கள் விஷ வைத்தியர், இரணவைத்தியர், பொதுவான வைத்தியர், கால் நடை வைத்தியர் என்ற பலவகையினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர். திக்கற்ற குழந்தைகளுக்கும், கதியற்ற காரிகையார்க்கும், கைம்பெண்களுக்கும், அங்கவீனர்களுக்கும் அரசிறையிலிருந்து கொஞ்சப் பாகத்தைச் சிவாஜி அளித்து வந்தனர். அவர்களைக் கவனிப்பதற்கும், கணக்கிட்டு அனுப்புவதற்கும் காரியஸ்தர்கள் ஏற்பட்டிருந்தனர் அதுவன்றி, போரில் மாண்ட வீரர்களின் குடும்பத்தாருக்கு அவர்விளை நிலங்களை இனாமாக விட்டிருந்தனர்.

கல்வி சம்பந்தமாக அவர் அதிகச் சீர்திருத்தம் செய்ததாகத் தெரியவில்லை. ஆயினும் நல்ல நூல்களைப் படிக்கக் கேட்பதிலும், கல்விமான்களிடத்திலும் அவருக்கு மிக்க விருப்பிருந்தது. சங்கீதவித்தை அவர் காலத்தில் உயர்நிலை

யடைந்திருந்தது. அவர் சமஸ்தானத்தில் அடிக்கடி சங்கீதக் கச்சேரிகள் நடைபெற்று வந்ததால், அவர் சங்கீத விற்பன்னர் என்பது விளங்குகின்றது. பஜனைக் காலங்களில் பாடப் பெறும் புதிய விதமான பாடல்கள் அவர் காலத்தே ஆரம்பித்தனவாகும்.

சிவாஜி தெய்வ பக்தியும், தரும சிந்தையும், உள்ளவரென்று நீங்கள் ஒருவாறு அறிந்திருக்கலாம். தேவாலயங்களுக்கு அவர் பல மானியங்களை இறையிலியாகவிட்டு, அவைகளுக்குத் தரும கர்த்தர்களையும் ஏற்படுத்தியிருந்தனர். நாட்டில உள்ள எல்லாக் கோயில்களையும் மேற்பார்க்கும் அதிகாரி ஒருவர் உண்டு. ஆலயங்களின் சொத்துக்களை அபகரித்தவர்களுக்கு அவர் தக்க தண்டனை விதித்தனர்; அன்ன தான சத்திரங்கள் பல ஏற்படுத்தினர். விசேஷ காலங்களில் பிராமணர்களுக்கும், துறவிகளுக்கும், பெரியோர்களுக்கும் அன்னம், ஆடை முதலியன அவர் அளிப்பது வழக்கம். சத்திரங்களையும், மடங்களையும் மேற்பார்ப்பதற்கு அத்தியட்சர் என்ற ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார். அவர் அவற்றின் கணக்குகளை மகாராஜாவுக்கு மாதந்தோறும் அனுப்பி வந்தனர்.

சிவாஜியின் காலத்தில் உள் நாட்டில் பெரிய வியாபார ஸ்தலங்கள் பல இருந்தனவாகத்

தெரியவில்லை. ஆனால் கடற்கரையில் கப்பல் வியாபாரம் நன்றாக நடந்துவந்தது. தானிய வர்த்தகமும் சில இடங்களில் நடைபெற்றது.

போக்கு வரவுக் கேற்றனவாக, அவர் அநேக பாதைகளை உண்டாக்கினர். அவை ராஜபாதை, பசுபாதை, சக்கரபாதை, பாதபாதை எனப் பல வகைப் பட்டனவாம். அவை முறையே முப்பது, எட்டு, பத்து, நான்கு அடி அகலமுள்ளன. இவைகளேயன்றி ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்துக்குச் செல்லும் 15 அடி அகலமுள்ள கிராமப் பாதைகளுமிருந்தன. மேலும் கால்வாய்கள், கழிகள் முதலிய நீர்ப்பாதைகளையும் அவர் அமைத்தனர். அந்தப் பாதைகளில் எதற்காயினும் எவ்விதத்திலேனும் அழிவு தேடுகின்றவர்கள் தண்டிக்கப்பட்டு வந்தார்கள்.

16. சிவாஜியின் குணாதிசயங்கள்.

இவர் யாவரும் விரும்பத்தக்க அழகுடையவர்; ஆஜானுபாகு; விரிந்த மார்பும், பரந்த நெற்றியும் உடையவர்; எலுமிச்சம்பழம் போன்ற நிறமுடையவர்; எட்பூ நாசியுடையவர். அவர் குரலானது கட்டளையிடும் தன்மை வாய்ந்து கம்பீரமாக இருந்தது; ஆயினும், வன்மொழியையும் அதிகாரச் செருக்கையும் உணர்த்துவதன்று. எளியவரிடத்தும் இன்மொழியே கூறும் இயல்பு

அவரிடம் உண்டு. நெற்றியிலுள்ள மடிப்புக் கள், அவர் எப்போதும் எதையும் நன்றாய் ஆலோசிக்கும் தன்மையுடையவர் என்பதை உணர்த்தும். சுருங்கச் சொல்லின், அரசர்க்குரிய உத்தம குணங்கள் யாவும் அவரிடம் ஒருங்கே அமைந்திருந்தன.

சிங்கத்துக் கொப்பான தேக வலிமையும், மன வலிமையும் அவருடன் பிறந்த குணங்கள். பசி தாகங்களைப் பொறுத்துக்கொண்டு நிசிவேளை யிலும் அச்சமும் அயர்ச்சியும் இன்றி நெடுந் தூரம் குதிரைச் சவாரி செய்யநேரிடினும் அவர் பின்வாங்க மாட்டார். குதிரைச் சவாரியில் அவரை மேற்கொண்டவர் அக்காலத்தில் இல்லை; வாட் போரினும் அப்படியே. தனிப்போர் செய் வதிலும் அவர் மனம் சலியாதவர். பிறர் செய்ய முடியாத காரியங்களை, அவர் தாமே முன்னின்று முடிப்பது வழக்கம்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' 'தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை' 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்னும் முதுமொழி கள் இவரைக் குறித்தே எழுந்தனவென்றால், அது குற்றம் ஆகாது. தாய் தந்தையர் விரும் பியபடி நடந்துகொள்ளும் மரியாதை அவரி டம் உண்டு. அவருடைய தாயே வாணாள் முழு தும் அவருக்கு மதிமந்திரியாய் இருந்தாள்.

குருவின் உபதேசமும், ஆசீர்வாதமுமே அவரை மன்னர் மன்னர் ஆக்கினது என்பர் சரித்திரம் உணர்ந்தோர். பான்ஸ்லே குலத்தார்க்குப் பவானி தேவியிடம் பக்தியதிகமென்று முன்னரே கூறினோம். அந்தப் பக்தி சிவாஜிக்கு அதிகம். அன்றியும், பண்டரிபுரம் திருமாலிடத்தும் அவருக்கு விசேஷ பக்தியுண்டு. ஆயினும் பிற இந்து தெய்வங்களை அவர் வெறுப்பவர் அல்லர். பசுக்களையும், பிராமணர்களையும் அவர் தேவதா விசுவாசத்துடன் கொண்டாடினவர்.

புராண இதிகாசங்கள் பாராயணம் செய்யப் படும் இடங்களிலும், கதா காலக்ஷேபங்களிலும், பஜனைகளிலும் சிவாஜி முற்பட்டிருப்பார். மதாபிமானமும், தேசாபிமானமும், குலாபிமானமும் அவரிடம் குடிகொண்டிருந்த பெருங்குணங்கள்; அவற்றை நிலைநாட்டுதற்குப் பிறந்த புண்ணிய புருஷரென்றும் அவரைக் கூறலாம். முகமதிய சுல்தான்களுக்கு ஊழியம்செய்து உடல் வளர்ப்பதை அவர் சிறிதும் விரும்பவில்லை. ஆதலால் முகமதியரிடமிருந்து விடுபட்டு மகாராஷ்டிர சாம்பிராஜ்யத்தை ஸ்தாபிக்கவே அவர் வாணாள் முழுவதும் வாளேந்திப் போர்புரிந்து, அரும்பாடுபட்டு முடிவில் தம்மெண்ணத்தைப் பூர்த்தி செய்து மன ஆறுதல் அடைந்தார்.

சிவாஜியிடம் 'நட்புப் பாராட்டுதல்' என்னும் அரியகுணம் அதிகமாயிருந்ததால், அவ

ருக்கு அந்தரங்கமான நண்பர் அநேகர் இருந்தனர். அவர்கள் யாவரும் ஒரே குலத்தவர் அல்லர். எக்குலத்தாராயினும் உள்ளன்புடையவர் ஆயின், அவர்கள் அவருக்கு உத்தம நண்பர் ஆவர். அவருக்காகத் தம் உயிரையும் விட்ட நண்பர் சிலர்; உயிரைவிட முன்னின்றவர் பலர். எவ்வித இடுக்கணிலும் அவர் தம் சிநேகிதரைக் கைவிடுவதில்லை உண்மையான நண்பருக்குப் பல உயர்ந்த பதவிகளும், பரிசுகளும், மரியாதைகளும் அவர் கொடுத்ததுண்டு. போரில் கிடைத்த பொருள்களில் அரியவற்றைத் தாம் வைத்துக் கொண்டு, மீதியை நண்பர்க்கும், போர்த் தலைவர்கட்கும், வீரர்களுக்கும் அவர் கொடுப்பது வழக்கம். தம் நயங் கருதாமல் நண்பரை அவர் கொண்டாடி வந்ததால் யாவரும் அவரை அபிமானித்தனர். ஆதலால் அவர் எடுத்த காரியங்களை இடுக்கணின்றித் தொடுத்து முடிக்கும் ஆற்றல் உடையவராக இருந்தனர். மன்னுயிரைத் தம்முயிர்போல் எண்ணும் எண்ணமுடையவர். சிவாஜி. போரில் பயந்து புறமிட்டாரையும், சிறைப்பட்டாரையும் அவர் வருத்தாது அன்புடன் நடத்திவந்தனர்.

போர் புரியாமல் தந்திரத்தால் வெற்றி பெறும் மார்க்கமிருந்தால் அவர் போரை விரும்புவதில்லை. போரில் வெற்றிபெற முடியா

தென்று உணர்ந்தால் அவர் சமாதானமே நாடு வது வழக்கம். இவற்றுக்கு உதாரணங்கள் அவர் சரிதையின் வரிகள்தோறும் காணலாம். பழிக் குப் பழி வாங்கும் தன்மை அவரிடமுண்டு. பகை வர் செய்யும் கேடுகளை மனத்திலே அடக்கிக் கொண்டு இருந்து, ஆங்காலம் வரும்போது யானை தன் பகைவனை முடித்தல்போல், அவரும் முடித்துவந்தார். இவ்வுத்தமர் பரதார சகோ தரர்; மடியுங் குடியுங்கொண்டு கேவலம் உலக இன்பங்களையே நாடியிருந்த அக்காலத்துச் சில சிற்றரசர்கள் போலாது, அவர் இம்மை மறு-மைக்குரிய எல்லாக் காரியங்களையும் இனிது நடத்தினர்.

தெய்வ பக்தியோடு பெரியோர்களிடத்தும் துறவிகளிடத்தும் அவருக்குப் பக்தி அதிகம் உண்டு. துக்காராம், ராமதாஸ் என்ற இரண்டு பக்த சிரோமணிகள் அவர் காலத்தில் இருந்தார்கள். அவர்களிடம் சிவாஜிக்குப் பேராத பெருமதிப்பு உண்டு. அவ்விருவரையும் அவர் தம் ஞானசி ரியராகக் கொண்டார். அவர்களைத் தமது அரண் மனைக்கு அழைத்தனர். அவர்கள் அதற்குஇணங் காததால் அவர்களுடனே சென்று காலங்கழிக்க அவர் நினைத்தனர். அப்போது ஜீஜாபாய் துக்கா ராமை வேண்டி அவரைக்கொண்டு அரச நீதி களை அவருக்கு எடுத்துச் சொல்வித்து அவர் எண்ணத்தை மாற்றினள். ஆயினும் அவர்

அவர்கள் கூறும் உபதேசங்களை அடிக்கடி கேட்டு அவற்றின்படி நடந்துவந்தனர்.

சிவாஜி அவ்விரு பெரியார்களிடத்திலும் கொண்ட மதிப்பையும் பக்தியையும் விளக்குதற்குப் பல கதைகள் வழங்குகின்றன. அவற்றுள் ஒவ்வொன்றை இங்குத் தருகின்றோம். ராமதாஸருடைய மகிமையைக் கேட்டறிந்த சிவாஜி அவரைக்காணும் விருப்பம் பெரிதும் உடையவராய், அவரைத்தேடி யலைந்தார். நெடுந்தூரம் திரிந்தபின், அவர் ஒரு நாள் ஒரு சிறு குகையில் அவரைக் கண்டார். அங்கே அப்பெரியார் நோய்வாய்ப்பட்டு மிகவும் வருந்திக் கிடத்தலைக்கண்ட சிவாஜி, அது தீருவதற்கு என்ன வேண்டுமானாலும் தாம் செய்வதாகச் சொல்லி வருந்தினார். ராமதாஸர் தம் நோய் நீங்குதற்கு ஒரு வழியுண்டென்றும், ஆனால் அக்காரியம் அவரால் செய்ய முடியாதது என்றும் சொல்லவே, அவர் தம்முயிர்க்கே அபாயம் வருவதாயிருந்தாலும் அதைச் செய்து முடிப்பதாகக் கூறி, அவ்வுபாயத்தைச் சொல்லியருளும்படி அவரை வற்புறுத்தி வேண்டினர். அவருடைய மனோதிடத்தைக்கண்டு, அவர் புலிப்பாலைக் கொண்டு வரும்படி கூறினர்.

உடனே சிவாஜியும் பின் வாங்காமல் வாளேந்திக் காட்டிற் சென்று, அங்கோர் புதரிற் கிடந்த புலிக்குட்டிகளைக் கண்டுபிடித்து வைத்

துக்கொண்டு, அவைகளின் தாய் வருதலை எதிர் பார்த்திருந்தனர். வெளிச்சென்றிருந்த பெண் புலி, சிறிது நேரம் சென்றபின் புதரை அணுகிச் சிவாஜியின் கையில் தன் குட்டிகளிருக்கக் கண்டு, அவர்மேல் பாயப்பதுங்கியது. அப்போது அவர் அஞ்சாது, 'நான் உன்குட்டிகளை ஒன்றுஞ் செய்ய வில்லை. தூயவராகிய ராமதாஸர் நோய் தீரும் பொருட்டு உன் பாலிற் சிறிதுதருக' என்றார்.

ராமதாஸர் பெயரைக் கேட்டதும் அப்புலி சாதுவாகிக் கீழே படுத்துக்கொண்டது. சிவாஜி பின்பு அதன் பாலைக் கறந்து, அவருக்குக் கொண்டுபோய்க் கொடுக்க, அவரும் சிறிது பருகி நோய் தீர்ந்தனர். எஞ்சியதை அவர் தம் குருவின் கட்டளையால் பருகிப் புலியைப்போல் வீரமும் வலிமையும் பெற்றனர் என்பர். இன்றும் வயது முதிர்ந்த பெரியோர்கள் தேகக்கட்டும் தைரியமும் உடையவர்களா யிருப்பார்களானால், ஜனங்கள் அவர்களைப்பற்றி, 'அவர்கள் புலிப் பால் குடித்தவர்கள்' என்று சொல்லுகிறார்களல் லவா? புலிப்பால் பருகியவர்கள் அதனைப்போ லவே வீரம் மிகுந்தவர்களா யிருப்பார்கள் என்ற தோர் நம்பிக்கையினால் இவ்வாறு சொல்லும் வழக்கம் எழுந்தது போலும்.

ஒரு சமயம் துக்காராம் சுவாமிகள் தம்சிஷ்யர் கள் வேண்டுகோளால் புனா நகரத்திற்கு வந்து

அங்கோர் வீட்டில் நாள்தோறும் கீதங்கள் பாடிப் பஜனை செய்துகொண்டிருந்தனர்.

சிவாஜி ஒவ்வோரிரவிலும் அங்குச் சென்று அவர் பாடும் கீர்த்தனங்களைக்கேட்டுப் பக்திவசப் பட்டிருந்து, பின்பு பஜனை முடிந்ததும் தம்மிருப்பிடமான சிம்மகடாக் கோட்டைக்குத் திரும்பிச் செல்வது வழக்கமாயிருந்தது. அதையறிந்த அவர் பகைவரான மூகமதியர் அவரைப் பிடித்துச் சிறைசெய்ய வெண்ணி, சுவாமிகள் பஜனை செய்துகொண்டிருந்த அவ்வீட்டை ஓரிரவு இரண்டாயிரம் வீரரோடு வந்து வளைத்துக் கொண்டனர். சிவாஜியின் பரிவாரத்தாரும், அங்கிருந்தபிறரும் அதையறிந்து, அஞ்சித் தப்பிச் செல்ல விரும்பி ஆத்திரப் பட்டனர். சுவாமிகளுக்கும் அந்த விஷயங்கள் விரைவில் தெரிந்தன. உடனே அவர் 'ஜனங்களே! நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். நம்மைக் காக்கும் பாரம் பகவானுடையது. ஆதலின் பகவன் நாம பஜனையில் கருத்தாயிருப்போமாக' என்றார். அது கேட்டு, அவர்கள் அவர் சொல்லை மீறி நடக்கத் துணியாதிருந்தனர். சிவாஜியும் அப்பெரியார் பாடிய கீர்த்தனங்களைக் கேட்டு மனமுருகியவராய்த் தம்மை மறந்திருந்தார். அப்போது அவர்களைக் காக்கும் பொறுப்புடையவரான கடவுள், ஓர் வீரனுருக்கொண்டுவந்து, அவ்வீட்டினின்றும் வெளிப்பட்டு அங்கு நின்ற ஓர் குதிரை

யின் மீது பாய்ந்தேறி, அதனைச் சூழ்ந்து நின்ற முகமதிய வீரர் காண வெகுவேகமாய்ச் சென்றனர். அதுகண்ட அவ்வீரர்கள் எல்லோரும், அவரே சிவாஜியைப்போலத் தோன்றியதால் அவரைத் தொடர்ந்தனர். அவர்கள் மிகவும் வேகமாகத் தங்கள் குதிரைகளைச் செலுத்தியும், அவ்வொற்றைக் குதிரை வீரனைப் பிடிக்க இயலவில்லை. அவ்வீரன் ஒரு காட்டிற்புகுந்து மறைந்தான். பின்பு பஜனை முடிந்ததும், அங்கிருந்தவர்கள் எல்லோரும் சுகமாகத் தத்தம் வீடு சேர்ந்தனர். சிவாஜியும் பத்திரமாகத் தம்மிருப்பிடமான சிம்மகடாக் கோட்டையை அடைந்தனர்.

மேற்குறித்த வரலாறுகளின் உண்மை எவ்வாறாயினும், அப்பெரியோர்களிடத்து அவர் எத்தகைய மதிப்புக்கொண்டிருந்தனரென்பதும், அவர்கள் சொல்லை அவர் எப்படிப் போற்றி வந்தனரென்பதும் எவர்க்கும் விளங்காமற் போகா.

முகமதிய அரசர்களில் இந்துக்களைத் துன்புறுத்தும் குணமுடையோரை அவர் வெறுத்துப் பொருதனரேனும், அம் மதத் துறவிகளையும் பக்கிரிகளையும் அவர் தாழ்வாக நடத்தவில்லை. கொள்ளைப் பொருள்களில் கொரானிருந்தால், அவர் அதனை முகமதியரிடம் கொடுத்துவிடுவார். முகமதியப் பள்ளிவாசல்களையும் கோரிகளையும் அவர் அழிப்பதில்லை. மத சுதந்தரத்தை

யடைய அவர் போர்தொடுத்தவர் ஆதலின், புறச்சமயக் கோட்பாடுகளை அவர் கெடுக்க எண்ணியதில்லை போலும். பிறருக்கு இடையூறின்றி யார் எம் மதத்தைப் பின்பற்றினாலும் அது அவருக்குச் சம்மதமே.

தேச பரிபாலனத்தில் அவர் நடுநிலையுள்ளவர். சிறுவர் ஒன்று கூறினாலும் அதில் இதமிருந்தால் அதன்படி நடப்பார். உற்றாரென்றும், பெற்றாரென்றும் அவர் நினையாமல் தம் பிரஜைகள் யாவரையும் ஒரு தன்மையாக நடத்திவந்தனர். அரச காரியங்களையெல்லாம் கவனிப்பதற்கும், குடும்ப சம்பந்தமான அலுவல்களைச் செய்வதற்கும் ஒரு கால அட்டவணை அவர் ஏற்படுத்தி வைத்திருந்தார். அவர் அதிகாலையில் 3 மணிக்கு எழுந்து முற்கூறிய வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு, இரவு 10 மணிக்குப் படுக்கைக்குச் செல்வார். எனவே, அவர் ஒவ்வொரு நாளும் 5 மணி நேரமே தூங்குவது வழக்கம். ஜாதி மத பேதங்களைக் கவனியாமல் உண்மையும் யோக்கியமுமுள்ளவர்களுக்கு அவர் உத்தியோகம் கொடுத்து வந்தனர். அக்காலத்துச் சுல்தான்களைப் போல அடுத்தவர்களை ஒரு நாள் வாழவைத்து, மறுநாள் தாழவைக்குங்குணம் அவரிடம் கிடையாது.

அவரைக் கொள்ளைக்காரனென்று தூற்றிக் கூறியவர்களும் தம்மை அறியாது அவரை வேறிடங்களிற் புகழ்ந்திருக்கின்றனர் என்றால்,

அவருடைய உத்தம இயல்புகளை யெல்லாம் நாம் எங்ஙனம் முற்றும் வரைய முடியும்?

17. சிவாஜியின் முடிவு.

1679-ஆம் வருஷம் பீஜப்பூரை முற்றுகை யிடுமாறு ஔரங்கசீப் டேலீர்கான் என்ற தலைவன் கீழே ஒரு பெருஞ் சேனையை அனுப்பினர். அச் சமயம் பீஜப்பூர் அரசர் தக்க பருவமடையாத சிறுவராக இருந்ததால், அந்நாட்டை ஒருவன் மேற்பார்த்து வந்தான். அவன் ஔரங்கசீபுக்கு விரோதமாகத் தனக்கு உதவிசெய்யுமாறு சிவாஜி யைப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டான். அங் ஙனம் உதவிசெய்தால், துங்கபத்திரை நதிக்கும், கிருஷ்ணா நதிக்கும் இடையிலுள்ள ரெயிச்சூர்ப் பிரதேசத்தை அவருக்குக் கொடுப்பதாகச்சொன் னன். பீஜப்பூருக்கு உதவிசெய்யவேண்டுமென்று எண்ணிய சிவாஜி பீமா நதிக்கும், கோதாவரி நதிக்கும் நடுவிலுள்ள பூமியைக் கொள்ளையடித் தார். மொகலாய ராஜப் பிரதிநிதி தங்கியிருந்த ஔரங்கபாத்தையே மூன்று நாட்கள் இராப்பக லாய்ச் சூறையாடினர். அவரை எதிர்க்க அப்பிரதி நிதியால் முடியவில்லை.

அங்கிருந்து திரும்பியதும் அவர் 27 கோட் டைகளைக் கைப்பற்றினர். பின்பு பீஜப்பூர் பிரதி நிதியிடமிருந்துவந்த ஒரு அவசரக்கடிதத்தைக் கண்டு பீஜப்பூருக்கு உதவிசெய்யச் சென்றார்.

அப்படிப் போகும்போது ஒரு சம்பவம் நடந்தது. சாம்பாஜி செய்த ஒரு குற்றத்திற்காகச் சிவாஜி அவரைப் பாதுகாப்பில் வைக்க, அவர் அங்கிருந்து தப்பி மொகலாய தளகர்த்தரிடம் போய்ச் சேர்ந்துவிட்டார். அவரை விடுவிக்கும் யுக்தியைச் சிவாஜி தேடினுர். உடனே பீஜப்பூருக்குத் தமது சேனையை அவரனுப்பினுர். அச்சேனை அங்கு முன்னரே முற்றுகையிட்டிருந்த மொகலாய சேனையைச் சூழ்ந்து அதற்கு உணவுப்பொருள் கிடையாதபடி செய்துவிட்டதால், டேலீர்கான் முற்றுகையை நீக்கும்படி ஏற்பட்டது. சாம்பாஜியும் தம் தந்தையார்பாற்சார்ந்தார்.

இதுகாறும் சிவாஜிமஹாராஜாவின் சுவை மிக்க சரிதத்தை மிக்க களிப்போடு கூறினேம்; நீங்களும் அதிக ஆவலோடு படித்தீர்கள். இனி நமக்கு வருத்தத்தைத் தரக்கூடிய செய்தியைச் சொல்லவேண்டியதாகின்றது. அது அவர் விண்ணுலகு அடைந்த செய்தியே யாகும். அவருக்கு முழங்காலில் ஒரு பிளவை உண்டாயிற்று. அது பெரிதாகி வீங்கி அதிகநோவை உண்டாக்கிற்று. அதனுல் இரணஜன்னி கண்டு 1680-ம் ஆண்டு ஏப்பிரல்மீ 5உ எல்லா இந்துக்களையும், அவருள் முக்கியமாய் மஹாராஷ்டிரரையும் ஆற்றெணுத் துயரில் ஆழவிட்டு 53-வது வயதில் இவர் பூதவுடம்பை ஒழித்துப் புகழுடம்பை அடைந்தனர். இவர் மரணத்துக்கு வேறு காரணமும் சொல்லப்படுகிறது. அதாவது, சிவாஜி மஹாராஜா மூத்த மனைவியின் மகனுன சாம்பாஜிக்கு மகுடம் புனைய ஏற்பாடுகள் செய்வதை அவரு

டைய இரண்டாம் மனைவியாகிய சூரியபாய் அறிந்து, அவரைத் தன் வயப்படுத்திக்கொண்டு தன் மகன் இராஜாராம் என்பவருக்குப் பட்டம் கட்டச்செய்வதற்காக அவருக்கு மருந்திட்டாள் என்றும், அதனால் அவர் இறந்தார் என்றும் கூறுவதாம். ஆயினும் பின்கூறிய செய்தி வலியுடையதாகத் தெரியவில்லை.

தமது நுண்மதியாலும், மதவைராக்கியத்தாலும், தெய்வ கடாட்சத்தாலும், ஆயிரம் அரும்பாட்டாலும் முயன்று மகாராஷ்டிர சாம்பிராஜ்யத்தை நிலை நாட்டிய இவரினும் பெரிய இந்து மன்னர் யார் இருந்தார்கள்? இவருக்குச் சமமாகக் கருதக் கூடியவர் எவரும் இருந்தார்கள் என்று கூறவும் எமது மனம் துணிய வில்லை. இவர் பன்னெடு நாளும் முயன்று ஒன்றாகச் சேர்த்த மகாராஷ்டிர நாடு 400 மைல் நீளமும் 120 மைல் அகலமும் கொண்டிருந்தது. அவர் புதிய இராஜ்யம் ஸ்தாபித்தார் என்பதோடு, அவர் மகாராஷ்டிரருக்கே புதிய செல்வாக்கையும், பெருமையையும் உண்டாக்கினர் என்னலாம்.

சிவாஜி மரித்ததால், ஔரங்கசீப் ஒருவாறு மனக்களிப்படைந்து இருந்தனரேனும், அவருடைய வீரத்தையும், விடாமுயற்சியையும், மதிநுட்பம் முதலிய குணங்களையும் புகழ்ந்து பாராட்டாமல் இருக்கவில்லை.

சிவாஜி மஹாராஜாவுக்குப் பிறகு அவர் தம் மூத்த குமாரர் சாம்பாஜி மகாராஷ்டிர மன்னராக மகுடம் புனைந்து கொண்டனர்.

முற்றிற்று.

Cudy
1-11-90

Cudy 11 12 20

பசுமலைக் கலாசாலைகளின் தமிழ்ப் பண்டிதர்,

நே. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்கள் எழுதிய

செந்தமிழ்ப் புத்தகங்கள்.

செந்தமிழ் வாசகப் புத்தகம். (ஆறும் வகுப்பு) அணா 7.

துருவன், காங்கரு, செல்வப்பிள்ளையின் சீரழிவு, தேயிலை, பரிகசிக்கும் பறவை, வைசூரி, சாவித்திரி, பக்தர்கள் சரித்திரம், அரங்கநாத சாஸ்திரி, பீற்றரும் விகடனும், பொற்கைப்பாண்டியன், ஜீரணம், விசுவநாதநாயக்கர், மஹாவீரர், ஔவையார், இந்தியதேச அரசாட்சி, இராசராசசோழன், வினைச்சொல், இலை, சந்திரகுப்தனது மதிநுட்பம், ஊர்கள், சீதாகல்யாணம் முதலிய வசன பாடங்களும், செய்யுட் கதைகளும், நீதிகற்பிக்கும் பாடங்கள் சேர்ந்த செய்யுட் பாடங்களும் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன.

செந்தமிழ் வாசகப் புத்தகம். (ஏழாம் வகுப்பு) அணா 8.

அரிச்சந்திரன், தாஜ்மஹால், பக்தர், அரங்கநாதமுதலியார், எரிமலைகள், ஆந்தை, ஆகுபெயர், முத்து, அன்னப்பன்பொன்னப்பன் ஆனது, இந்தியராஜாங்கக்காரியதரிசி, கரிகாற்சோழன், இராமர் வனமடைதல், விஷபேதி, புஷ்பம், கனிமரங்களை யொட்டவைத்தல், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி முதலிய பல வசன பாடங்களும், செய்யுள் தழுவிய பல கதைப் பாடங்களும் தனிச் செய்யுட்களும், நீதிச் செய்யுட் பாடங்களும் இவ்வாசகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

செந்தமிழ் வாசகப் புத்தகம். (எட்டாம் வகுப்பு) அணா 8.

பாண்டியதேச நாயக்க மன்னர் வரலாறு—பாண்டிய தேசாதிபதிகளாகிய விசுவநாத நாயக்கர், திருமலைநாயக்கர், மங்கம்மாள் முதலிய நாயக்க மன்னர் வரலாறு முழுமையும் எடுத்துரைப்பது. பலமன்னரின் உருவப்படங்களுடன் கூடியது. சரித்திரவல்லுநராலும். பத்திரிகைகளாலும் மிகவும் கொண்டாடப்பட்டது. விலை அணா 6.

மாணவர் விருந்து—கரிகாற்சோழன், மனுச்சோழன், பொற்கைப் பாண்டியன் - இவர்கள் சரிதைகள் வெண்பாக்களில் அமைந்த செய்யுள் நூல். விலை அணா 6.